
# தமிழரசு

16-1-1997 ரூ. 3







# இந்த இதழில் ...


★ வளம் பெறுக! நலம் பெறுக!
- முதல்வரின் பொங்கல் வாழ்த்து ........ 2

★ வெற்றி மேல் வெற்றி
- டாக்டர் ஔவை நடராசன் ........ 5

★ நாடகத் தமிழ்
- இராம. நாராயணன்,
தலைவர், இயல், இசை நாடக மன்றம் ........ 6

★ வானமே வந்து விடு!
- கவிஞர் மு. மேத்தா ........ 9

★ கவின்மிகு தமிழகக் கலைகள் ........ 10

★ இசையைப் போற்றுவோம்
- முதல்வர் கலைஞர் ........ 16

★ பவளக்கால் நூலான்
- கே.சி.எஸ். அருணாசலம் ........ 20

★ அறிவியல் துளிகள் ........ 28

★ கவிதைச் சோலை ........ 30

★ இசைத் தமிழ்
- இசைப் பேரறிஞர் டி.ஆர். பாப்பா ........ 34

★ வலிப்பு நோய்
- டாக்டர் கே.எஸ். ஜெயராணி ........ 37

★ எங்கள் ஊர் பிரச்சினை ........ 41

★ வேலைவாய்ப்புச் செய்திகள் ........ 45

★ அரசு உதவி பெற யாரை
அணுக வேண்டும் ........ 46

★ ஆசிரியர் மடல் ........ 48



**தமிழரசு**

திருவள்ளுவராண்டு: 2028

தைத் திங்கள் : 3

மலர்: 27 இதழ்: 14

16.1.1997

விலை: ரூ. 3

மாண்புமிகு முதல்வரின் பொங்கல் வாழ்த்து:



# வளம் பெருக!

மஞ்சளும், கரும்பும் நெல்லும் மற்றுள பலவும் தந்து, பஞ்சமும் பசியும் போக்கப் பாரிலே பாடுபடும் உழவர்களின் திருநாளே பொங்கல் திருநாள்; காடுதிருத்திக் கழனிகள் செப்பனிட்டுப் பட்ட பாட்டுக்குப் பலன் கண்டு, அவர்கள் மகிழ்ந்தால் அவனி மகிழ்ந்திடும்; ஆனால் இந்தப் பொங்கல் நாளில்...?

உளந்தளராது உயர்விளைச்சல் தரும் தானிய வகைகளைப் பெரும் பரப்பில் பயிரிட்டு, அதன் பயனை அனுபவித்திடும் நேரத்தில் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டும் தறுவாயில் தட்டிப் பறிப்பதைப் போல' மழை வெள்ளம் ஏற்பட்டு வெகுவாகச் சேதம் விளைவித்து விட்டது.

இயற்கை தரும் இன்னல்களுக்கு எதிராக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க, விடாமுயற்சியுடன் பாடுபட்டுவரும் தமிழ்நாடு உழவர் பெருமக்களுக்கு என் உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி 'மேழி பிடிக்கும் கை, மேதினி ஆளும் கை' என்ற நிலைமைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காக அரசு பல்வேறு




# நலம் பெறுக!


வகையிலும் முயன்று வருகிறது. உழவர் திருநாளாம் பொங்கலன்று, உழவர் பெருமக்கள் அனைவரும் 'ஒருமணித் தானியம் விளைந்த இடத்தில் இருமணித் தானியம் விளைவிப்பேன்; ஒருகதிர் விளைந்த இடத்தில் பலகதிர் விளைவிப்பேன்; ஒருபோகம் விளைந்த இடத்தில் இருபோகம் விளைவிப்பேன்' என்ற உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும், என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், உங்கள் முயற்சிக்குத் தமிழ்நாடு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கத் தவறாது என்ற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில், நிவாரணப் பணிகள் போர்க்காலப் பணிகளைப் போல் விரைந்து நடைபெற்று வருகின்றன.

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்பதற்கொப்ப பசிப்பிணி மருத்துவர்களாக விளங்கும் உழவர் பெருமக்களின் வாழ்வு வளம் பெறுக; நாட்டு மக்கள் அனைவரும் நலம் பெறுக, என இப் பொங்கல் திருநாளில் வாழ்த்துகின்றேன்.









# பெரியார் - திரு.வி.க - பாவேந்தர் விருது

பெரியார், திரு.வி.க., பாவேந்தர் விருது வழங்கும் அரசு விழா 25.12.96 அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கத்தில் சிறப்பாக, ஆனால் எளிமையான முறையில் நடைபெற்றது.

விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பெரியார் விருதினைத் திருவாரூர் தங்கராசு அவர்களுக்கு தங்கப் பதக்கம் அணிவித்து, 20 ஆயிரம் ரூபாய்க்கான பொற்கிழியையும் வழங்கி சிறப்பித்தார்.

திரு.வி.க. விருதினைப் பேராசிரியர் முனைவர் மா. நன்னன் அவர்களுக்கு உவந்தளித்து, 20 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையினையும் முதல்வர் வழங்கினார்.

தொடர்ந்து, முதல்வர் அவர்கள் பாவேந்தர் விருதைக் கவியரசு வைரமுத்து அவர்களுக்கு அளித்து, 20 ஆயிரம் ரூபாயையும் அளித்து மகிழ்ந்தார்.

விழாவில், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டு துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையுரையாற்றினார். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

விருதுகள் பெற்ற மூவரும் ஏற்புரை ஆற்றினார்கள்.

நிறைவாக முதல்வர் கலைஞர் அவர்கள் விருது பெற்றவர்களை வாழ்த்திப் பேருரையாற்றினார்

அவர் பேசும் போது, "பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் 'பெரியார் ஆய்வு இருக்கை' விரைவில் அமையும் என்று அறிவித்தார்.

முன்னதாக- தமிழ் பண்பாடு மற்றும் வளர்ச்சித்துறை செயலாளர் திரு. வை. பழனிச்சாமி வரவேற்புரையாற்றினார். விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு. ஆர்.எம். வீரப்பன், திரு. ஆனூர் ஜெகதீசன் மற்றும் சான்றோர்கள் பலர் திரளாக வந்து கலந்துகொண்டனர்.

## அட்டைப்பட விளக்கம்

**முதலாம் அட்டை:**

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா காட்சிகள்


**இரண்டாம் அட்டை:**


பெரியார் - திரு.வி.க. - பாவேந்தர் விருது வழங்கும் விழா.

**நான்காம் அட்டை:**

தமிழகத்தில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட மத்திய நிபுணர் குழுவினர், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களைச்சந்தித்தனர் (30.12.1996).

# பொங்கல் பொங்கல்!





செங்கதிரோன் தன்னொளியைப் பெற்ற தாலே
செந்நெல்வயல் பொன்னொளியாய் எதிர் ஒளிக்கும்
பொங்கலெனும் மங்கலநாள் வந்த திங்கே!
புது வளத்தால் மாந்தரெலாம் நலமே காண்பார்
எங்களது வாழ்வினொடு நலமும் எல்லாம்
இயலிசையாய் நாடகமாய் இலங்கு கின்ற
மங்காத தமிழென்ற புரட்சிப் பாட்டை
மனங்கொண்டு தமிழ்த்திருநாள் மகிழ்கின் றோமே!

கலைஞர் தமிழ் முதல்வரெனக் காட்சி நல்கி
கருணைக்கோர் நிதியமவர் நீதி யாளர்
தலைவரெனத் தமிழ்காக்கும் தலைமையேற்றர்
தன்னிகரில் அன்பினொடு தறுகண் தாங்கி
நிலைமைபெறும் தமிழ்க்குடிநன் மகனாய் நிற்பார்
நிறைபணிகள் நெஞ்சாரச் செய்ய வல்லார்
அலைகடலாய் ஆர்ப்பரிக்க அனைவர் நெஞ்சும்
அகமகிழ ஆள்கின்றார் அறத்தி னோடு!

தமிழ்காக்கத் தன்னலத்தைத் துறந்த மேலோர்
தன்மானப் பேரியக்கத் தகைமை சான்றார்
தமிழ்நலமும் தமிழுணர்வும் தமிழர் வாழ்வும்
தழைத்திடவே முயல்கின்றார் தடைகள் தாண்டி!
தமிழறிந்தார் முதலமைச்சர் என்ற போது
தமிழ்மனங்கள் தையென்று தாள மிட்டுத்
தமிழகந்தான் உயருமினி உலகு போற்றும்
தன்மைபெறும் என்றுணர்த்த வருக தைநாள்!

முத்தமிழின் புகழ் மணக்கும் தமிழர் நாட்டில்
மூவேந்தர் ஆண்டபுகழ் மீண்டும் தோன்ற
எத்திசையும் புகழ்மணக்கும் ஏற்றம் கொண்டோர்
ஏந்தியநற் கொள்கையினார் ஆட்சி யேற்றார்
தைத்திருநாள் வந்ததின்று மகிழ்ச்சி பொங்கத்
தமிழ்த்திருநாள் மலர்ந்ததின்று புதுமை பொங்க!
வித்தகமே நிறைந்திருக்கும் தமிழர் வாழ்வீர்
வெற்றியின்மேல் வெற்றியினி விளையும் நன்றே!

தைமகளும் வந்துவளம் தரப்போகின்றாள்
தடையாக நின்றபல தகர்ந்து வீழ
பொய்மைகளும் புரட்டுகளும் பொடியாய்ப் போக
புதுமைகளும் பெருமைகளும் பூத்து நிற்கச்
செம்மைதரும் செந்தமிழின் கீர்த்தி தங்கும்
சிந்தையிலே பெருமகிழ்ச்சி வெள்ளம் பாயத்
தம்மைநிகர் இல்லாத தனிமாண் போடு
தமிழ்த்திருநாள் பூத்ததின்று பொங்கல் நாளாய்!

- டாக்டர் ஔவை நடராசன்




**க**ற்கள் காற்றோடு உரசி மண்ணைப் பிரசவிப்பதற்கு முன்பே அன்னையின் கருவில் உருவாகி விட்டான் தமிழ்மகன்.

உலகம் ஊமையாக இருந்த போதே ... பேசிச் சிரித்தவன் பழந்தமிழன்.

ஏனையோர் ஓசைகளை பாஷை யாக்க முயற்சிக்கும் முன்னரே... மொழிக்கு எழுத்தைக் கண்டவனும் முன்தோன்றிய மூத்த குடிமகன் தான்!

மூங்கிலோடு பேசும் தென்ற லின் மொழியை, தானே ஜதி சொல்லியபடி தாளநயத்தோடு ஓடும் அருவியின் ஓசையை

தேன் வண்டுகளின் தெவிட்டாத ரீங்காரத்தையும் இசையாக மொழி பெயர்ந்தவனும் இன்பத்தமிழன் தான்.

இயலையும் இசையையும் கலந் தொரு புதிய வடிவத்தை உருவாக்கி அதற்கு நாடகம் எனும் நாமதேயம் தந்ததும் நற்றமிழ் நாயகன்தான்.

மூலாதாரமான தமிழ் அன்னை யின் மூன்று அவதாரங்கள்தான்... இயல்தமிழ் இசைத் தமிழ் ... நாடகத் தமிழ்.

முத்தமிழால் அன்னை முப் பெருந்தேவியாகி இயல் தமிழால் பேசினாள், இசைத் தமிழால் பாடினாள், நாடகத் தமிழால் ஆடினாள்.


**இராம. நாராயணன்**
**தலைவர்**
**இயல் இசை நாடக மன்றம்**


எனது நெற்றிப் புருவம் மேலும் சுற்றி கேள்விக்குறியாய் வளைந்து நின்று ஒருவினாவை எழுப்புகிறது.

நாடகம் தோன்றி எத்தனைக் காலமாகிறது?

காற்றின் மூலத்தையும் ஒளியின் ஆதாரத்தையும் கண்டறிவதைவிட கடினமான பணி நாடகக் கலை கருவான காலத்தைக் கண்டு பிடிப்பது.

விழுதுகளே வேர்களாகி நின்று தாங்கிக் கொண்டிருக்கும் ஆல விருட்சத்தின் மூலவித்தைத் தேடி னால் மூளைக்கு எட்டாது.

எனினும்- சரித்திரத்தின் கண்ணுக் கெட்டிய தூரத்தை உங்கள் செவிக்கு எட்ட வைக்க வேண்டுமெனச் சில செய்திகளைச் சொல்லுகிறேன்.

அகத்தியன்-

தமிழைத் தொட்டிலிலிட்டு த் தாலாட்டி தோளிலிட்டுச் சீராட்டி வளர்த்த தமிழ்க் கிழவன்.

தமிழ் வயலுக்கு வரப்புயர்த்தி வாய்க்கால் வெட்டி பாத்திகட்டிய.. மொழி உழவன் அக்த்தியன் தந்த "அகத்தியம்" என்ற அரிய இலக்கண நூல். இயல் இசை நாடகமென்னும் முத்தமிழை முறைப்படுத்தியதால் அந்நூல் .. நாடகம் பற்றிய செய்திகளை நிறையச் சொல்லுகிறது. எனின்.. அதற்கும் முந்தியது அன்றோ நாடகக் கலை..!

தொல்காப்பியத்திற்கும் தொன் மையான நாடகக் கலை ஆரம்பக் காலத்தில்

**அகக்கூத்து**
**புறக்கூத்து**
**வேத்தியல்**
**பொதுவியல்**
**வரிக்கூத்து**
**வரிச்சாந்திக்கூத்து**
**சாந்திக் கூத்து**
**விநோதக்கூத்து**
**இயல்புக்கூத்து**
**தேசியக்கூத்து**

-என்று பலவகைக் கூத்துகள் இருந்ததாக ஆராய்ச்சியாளரின் கூற்றுகள் மூலம் தெரிகிறது.

அதில்-

வேந்தர்க்காக ஆடிய கூத்து வேத்தியல் கூத்து.

பொது ஜனங்களுக்காக ஆடியது பொதுவியல் கூத்து.

அன்று. கோலோச்சுபவர் முதல் குடிமக்கள் வரை கண்டுகளிக்கப் பட்ட அந்தக் கூத்துகள்தான் நாட்டின் அகத்தைப் பிரதிபலிக்கும் நாடகம் ஆகி... இன்று நாடாண்டு கொண்டிருக்கிறது என்றால் அந்தப் பெருமை தஞ்சை மண்ணையே சாரும்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு

வரை தத்தித்தவழ்ந்து நடைபயின்று கொண்டிருந்த நாடகக் கலை சோழப் பேரரசு தோன்றிய காலந் தொட்டு சோர்வு நீங்கி வீறுநடை போட ஆரம்பித்தது.

நெல்லுக்குக் களம் கண்ட சோழர்கள் நல்ல பல நாடகத்திற்கும் மேடை கண்டனர்.

பாட்டாளி மக்களின் உழைப்பை வர்ணிக்கும் 'பள்ளு' நாடகம்...

குறிஞ்சி நிலக் குறவர்களின் மோகத்தை மையப்படுத்திய 'குறவஞ்சி' நாடகம்...

திருடிப் பிழைத்துப் பின் திருந்திவாழும் திருடர்களின் கதை கூறும் 'நொண்டி' நாடகம்...

என்ற மூவகை நாடகங்களும் முன்னோடி நாடகங்களாகும்.

இப்படியெல்லாம் கோவிலிலும் தெருவிலும் ஆடப்பெற்ற நாடகங் களை மேடைக்குக் கொண்டுவந்த முன்னோர்களில் முதன்மை யானவர், சீர்காழி அருணாச்சல கவிராயர்.

அவருடைய நாடகத்தில் பாடப் பெற்ற அற்புதமான கீர்த்தனைகள் இன்றும் இசை விழாக்களில் கரவொலி பெறுகிறது.

கவிராயர் காலத்தில் வந்த மேடைக்கு வெள்ளைத் திரைக்குப் பதில் வண்ணத்திரை கட்டி அழகு பார்த்தவர் கோவிந்தசாமி ராவ்.

விடிய விடிய நடந்து வந்த நாடகத்தின் கால அளவை மூன்று மணியாகச் சுருக்கியவர் நாடகத் தந்தை பம்பல் சம்பந்த முதலியார்.

பம்மலார் தம் மேடையில் மேநாட்டு முறையில் நாடகங்களைத் தந்தபோது 'பவளக்கொடி', 'வள்ளித் திருமணம்' என நாட்டுப் புற அம்மானைக் கதைகளையும் தெருக்கூத்துக் கதைகளையும் மேடைக்குக் கொண்டுவந்தவர் சங்கரதாஸ் சுவாமிகள்.

தொடர்ந்து,...

-நாட்டுப்பற்றை நாடகமாக்கிய தெ.பொ.கிருஷ்ணசாமிப் பாவலர்.



## எங்கள் வாழ்த்து !

தமிழர் திருநாளாம் பொங்கல் விழா நாளில் - வாசகர்களுக்கும், முகவர்களுக்கும், விற்பனையாளர் களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், ஏனையோருக்கும் 'தமிழரசு' மனங்கனிந்த நல்வாழ்த்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

-ஆசிரியர்

-நாவல்களுக்கு மேடை வடிவம் தந்த எம்.கந்தசாமி முதலியார்.

-நடிப்பின் சிகரம் எம்.கே.ராதா.

-பிரம்மாண்டத்தை மேடையில் காட்டி பிரமிப்பை உருவாக்கிய நவாப் டி.எஸ்.ராஜமாணிக்கம் பிள்ளை.

-வீரபாண்டிய கட்டபொம்மனை மேடையில் வீரமுழக்கமிட வைத்த சக்தி கிருஷ்ணசாமி.

-சடையர், என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் எள்ளல் நாடகத் தின் வள்ளல் எம்.ஆர். ராதா.

-அறுபது ஆண்டுகளுக்கு முன்பே முப்பரிமாணத்தை (Three Dimension) மேடையில் புகுத்தி அற்புதம் செய்த சி. கன்னையா.

-நாடக உலக சகாப்தமாகப் பேசப்பட்ட நால்வர், டி.கே.எஸ். சகோதரர்கள்.

-சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணர்.

-திரையில் முடிசூட்டப்பட்டாலும் பிறந்த வீட்டிற்குச் சேவை செய்த புரட்சி நடிகர் எம்.ஜி.ராமச்சந்திரன்.

-நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

நாடகத்தில் வளர்ந்து நாடகத் தையும் வளர்த்தவர்கள் பட்டியல் போட பக்கங்கள் போதாது. அனைத்துக்கும் மேலாக...

அதுவரை பாடிக் கொண்டி ருந்த சினிமாவைப் பேசவைத்துப் பெருமை பெற்ற... அறிஞரும், கலைஞரும் 'பகுத்தறிவு' பேசியது நாடக மேடையில்தான். சுயமரியா தையைச் சொல்லித் தந்தது நாடக மேடையில்தான்!

அன்று, நாடகமேடை வழியே பொதுக்கூட்ட மேடைக்குவந்த அறிஞர் அண்ணாவும், கலைஞரும் தாங்கள் செய்த நாடகப் புரட்சியால் நாடாளும் தகுதியைப் பெற்றார்கள் என்றால் மிகையாகாது.

இப்படி எத்தனையோ சிறப்புகள் பெற்ற நாடகக் கலை நேற்று திரைப்படம் தோன்றியபோது திகைத்து வழிவிட்டது.

இன்று சாட்டிலைட் டி.வி. விஞ்ஞானப் புயலில் சிக்கிச் சுழன்று திசை தெரியாமல் தடு மாறுகிறது என்பது கசப்பான உண்மையென்றாலும்-

நாடு வாழ நாடகக்கலை வாழவேண்டும் என்ற அடிப்படை யில் அந்த உன்னதமான கலையை வாழவைக்கவேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அன்று- தஞ்சையை ஆண்ட ஒரு மன்னன் நாடக ஆசிரியர்க்குச் சொர்ணாபிஷேகம் செய்தான்!

அது- நேற்றைய வரலாறு.

தஞ்சைத் தரணியில் பிறந்த தங்கத் தலைவராம் நம் கலைஞர் அவர்கள் பொன்மழைபோல் பொருள்மழை பொழிந்து, நாடகக் கலையை வாழவைக்கிறார்- வாழ வைப்பார்...

இது நாளைய வரலாறு!







# வாசகர் இதயம்

மக்களின் நலனில் அக்கறை கொண்டு, தொடர்ந்து மருத்துவக் கட்டுரைகள் வெளியிட்டு வருகிறீர்கள்; இதயநோய் பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது.

-எஸ். நாகராஜன்,
மேலப்பாதி.

மூதறிஞர் ராஜாஜி பொன்மொழிகளைத் தொகுத்து வெளியிட்டிருந்தது மிக அருமையாக இருந்தது.

-க. சந்திரசேகரன்,
தாராபுரம்.

அரசு உதவிகளைப் பெறத் தக்க வழிமுறைகளை வெளியிடுவது பயனுள்ளதாக இருக்கிறது; இதுபோல் எல்லாத் துறைகள் பற்றியும் வெளியிடுங்கள். நகைச் சுவைத் துணுக்குகளை வரவேற்கிறோம்; நிறுத்திவிடாதீர்கள்.

-வ. செயராமன்,
ஆவணியாபுரம்.

'கம்பனும் பாரதியும்', 'கம்பர் கவிநயம்' இலக்கியக் கட்டுரைகள் கட்டிவெல்லமாக இனித்தன; சிறுவர் முதல் பெரியோர் வரை, இவ்வாறு படித்து மகிழத்தக்க இலக்கியக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

-க. நஞ்சையன்,
பாலசமுத்திரம்.

நம் நாட்டுத் தலைவர்கள், அறிஞர்கள், மேதைகளின் அறிவுரைகளை மட்டுமன்றிப் பிற நாட்டினரின் அறிவுரைகளையும் மொழி பெயர்த்து நிறைய வெளியிடுங்கள்.

-ஜி. மூர்த்தி,
பழம்பேட்டை-தி.ச.மா.

முன்பு, ஆளும் கட்சியின் விளம்பர ஏடாக மட்டுமே வந்த 'தமிழரசு', தற்போது மிகவும் பயனுள்ள பல நல்ல செய்திகளுடனும், நல்ல திட்டங்களுடனும் வெளிவருகிறது. இது பாராட்டத்தக்கதும், வரவேற்கத் தக்கதும் ஆகும்.

-ஜே. நாகராஜ்,
எடமலைப்பட்டி, புதூர்,
திருச்சி.

'ராகிங்' கொடுமை பற்றி 'ஆசிரியர் மடலில்' கூறப்பட்ட விளக்கங்களின விளைவே, அதன் மீது தடைபோடப்பட்டது என நினைக்கிறேன்; கடைசிப் பக்கம் கருத்துப் பக்கமாக இருக்கிறது. அதேபோல அரசு ஆணைகளை வெளியிடுவதும் ஆக்கபூர்வமானதாகும்.

-ப. முருகேசபாண்டியன்,
கரப்பாடி.

பயன்மிகுந்த படைப்புகள் பலவரும் 'தமிழரசு' மென்மேலும் வளர்ச்சி பெற வாழ்த்துகிறேன்.

-ந. சரவணன்,
இலுப்பூர்.

தமிழனுக்காகவும், தமிழுக்காகவும், தமிழகத்திற்காகவும் 'தமிழரசு' ஆற்றிவருகின்ற தன்னிகரில்லாப் பணிகளுக்குத் தலை வணங்குகிறோம்.

-கா.நா. ராஜசேகர்,
மங்களபுரம்.

இப்போதெல்லாம் 'தமிழரசு' பாதுகாக்கப்பட வேண்டிய பொக்கிஷமாகி விட்டது.

-ஆ. ஆத்மநாதன்,
பட்டுக்கோட்டை.

'கோகு' தாண்டிய 'கோதை' கதைபோல் சிறந்த சிறுகதைகள் அடிக்கடி 'தமிழரசில்' இடம்பெற வேண்டுகிறேன்.

-கு. அன்பழகன்,
சின்னசேலம்.

# வானமே வந்துவிடு!

- கவிஞர். மு. மேத்தா

கை வளையல் கிணுகிணுக்கக்
காலமகள் வாசலிலே
தை மகளும் _ என்
மை மகளும்
த்மிழ்க் கோலம் போடுகிறார்!

கண்ணை இறுக்கிய
கட்டவிழ
காதலென்னும் மொட்டவிழ
பச்சை வயல் பட்டவிழ...
பொன்னை உருக்கிய
புதிய உதயமெனும்
பொங்கல் வருகிறது!

சின்ன மணிக்கொலுசு
சிணுங்க வந்திருக்கும்
கன்னி இளமயிலைக்
காதலுடன் வரவேற்போம்!
வைகறைகள் வருக!
கறைகளில்லாத
வைகறைகள் வருக!

ஆதரவில்லாத
அபலைகள்மீது
அக்கறைகள் கொண்ட
வைகறைகள் வருக!

நாம் மண்ணில் ஏற்படுத்தும்
மகிமைகள்...
வானத்தை இனிமேல்
வருத்தப்பட வைக்கட்டும்!

அந்த வானம்_
போகமுடியாதா
பூமிக்கென்று
புலம்பட்டும்!

நட்சத்திரங்களை
நம் வீட்டுச்



சின்னச் செடிகளில்
புஷ்பங்களாகப்
பொருத்தலாம் !


நம்முடைய
இல்லத்தரசிகளின்
முகங்களோடு
மோதமுடியாமல்
நிலவுகள்
நெளியட்டும்!

நிமிர்ந்த நம் இளைஞரின்
நெருப்பு விழிகளுக்குள்
சூரியனும் வந்து
சுழலட்டும்!

மானுடத்தின்
பளிங்கு மனங்களைப்
பார்த்தபடி
வானம்
கலைந்து கிடக்கும்தன்
மேகக்கூந்தலை
சீவிக் கொள்ளட்டும்!

சொர்க்க சுகங்களெல்லாம்
சுருட்டி எடுத்துவந்து
நிற்க வைப்போம்
நம்முடைய
நேரெதிரே!

வானத்தைத் தொடுவதற்குக்
கனவுகள் கண்ட
காலம் முடிந்தது!
இனி_
வானமே இங்கு
வந்துவிடு என்று
ஆணையிடுகின்ற
ஆற்றலினை நாம் பெறுவோம்!



# கலைமிகு தமிழகக் கலைகள்



தமிழர்களின் வாழ்வோடு இணைந்தது இசையும் கலையும். கலைகள் தமிழர்களால் போற்றி வளர்க்கப்பட்டன. அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் கலைகள் பற்றிய சில குறிப்புகள்:



**நாதசுரம்**

சீர்மிகுந்த விழாக்களைச் செந்தமிழ் மக்கள் நாதசுர இசையோடு தான் நடத்துவார்கள். மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளை இந்த மங்கள இசையுடன் தொடங்குவது நம் முன்னோரின் நடைமுறை.

'நெடுங்குழல்' என்றும் பெருவங்கியம் என்றும் போற்றப்படும் நாதசுரம் அமுத இசை வளர்க்கும் துளைக் கருவி. நாதசுரம் நீண்ட குழ்லுடன் சீவாளி இணைத்து வாசிக்கும்போது இசைவெள்ளம் பூம்புனல் வெள்ளமாகப் பொங்கிப்பெருகும். நாயன இசைக் கலையில் தமிழ்ப் பெருமக்கள் பேராற்றல் மிக்கவர்களாக விளங்கி வருகிறார்கள்.

**பரத நாட்டியம்**

தமிழகத்துக்கே உரிய தன்னிகரற்ற இந்த ஆடற்கலை, தமிழகத்தின் எல்லைகளைத் தாண்டியும் பல்வேறு வடிவங்களை எடுத்து விளக்குகிறது.

கால்கள் ஜதிபோட, கை விரல்கள் பொருள் குறிக்க, கண்கள் உணர்ச்சிகளைக் கொப்பளிக்க, முகம் பலவிதமான மெய்ப்பாடுகளைப் புலப்படுத்தும் இந்த ஆடற்கலை, அழகுக்கலைகளில் அரிய கலையாகும். சிலப்பதிகாரத்தில் பரதத்தைப் பற்றிய சீரிய குறிப்புகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

**கோலாட்டம்**

கருத்துக்கள் சி[illegible] இசை வடிவில் அமைத்து ஆண், பெ[illegible]ருபாலரும் கையில்

ஒன்று அல்லது ஒன்றரை அடி அளவுள்ள குச்சிகளை வைத்துக் கொண்டு, பாடல்களின் சந்தத்திற்கு ஏற்றபடி குச்சிகளால் தாளம் தட்டுவது போல் ஆடிப்பாடுவது கோலாட்டம். இந்த ஆட்டம் உடலுக்கு நல்ல வலுவையும், உள்ளத்திற்குத் தெம்பையும் நல்குவது.



கோலாட்டம் சில மாறுதல்களுடன் பிற மாநிலங்களிலும் திகழ்ந்தாலும் தமிழகத்துக் கோலாட்டம் தனிச் சிறப்புடையது.

## கும்மி

கருத்துக்களை இசையுடன் கூடிய பாடலாக அமைத்து, பெண்கள் கைகளைக் கொட்டிக் கொண்டு பாடிப் பரவிடுவது கும்மி. இது பெரும்பாலும் பெண்கள் மட்டுமே ஆடும் ஆடலாகும்.

உடலுக்கும், உள்ளத்துக்கும் நல்ல பயிற்சி நல்குவது; கருத்துக்களை கவின்மிகு இசைக்கூட்டி, கேட்போர் நெஞ்சை ஈர்த்திட வைக்கும் திறனுடையது.

பக்தி, ஞானம் போன்றவற்றின் அடிப்படையில் அமையும் கும்மிப் பாடல்களும் உண்டு. கும்மி, மக்கள் மனம் கவரும் மகத்தான நாட்டுப்புறக் கலையாகும்.

## நாட்டுப்புறப் பாடல்கள்

கிராமப் பகுதிகளில் சிந்தனை வளமும், கற்பனை நயமும் கொண்டு ஒருவர், தாம் சொல்ல வரும் கருத்துக்களைச் சுவையாகவும், நெஞ்சில் பதியும் வண்ணமும் எளிய பாடல்களாக அமைத்து, தம் சொந்த இசையில் பாடும் பாடல்களே நாட்டுப்புறப் பாடல்களாகும். இதில் கடந்த கால நிகழ்ச்சிகளைப் பற்றிய குறிப்புகளும், விவரங் களும் இருக்கும். நிகழ்காலத்து நிலைமை விளக்கங்களும் இருக்கும். எதிர்காலத்தில் எய்திட வேண்டிய இலக்கும், எழுச்சி நிறை கருத்துகளும் இருக்கும். நாட்டுப்புறப்பாடல் களில் வாழ்க்கை நெறிகள் பலவும் வளமாக விரவிக் கிடக்கும்.



ஏட்டில் எழுதாத கவிதைகள் இந்த நாட்டுப்புறப் பாடல்கள், பெரும்பாலும் இவற்றைப் பாடிய பெருமக்களின் பெயர் தெரியாது.

காடுமேடுகளில் வேலை செய்யும் ஏழை எளிய மக்களின் உள்ளத்து உணர்வுகளின் அற்புதமான வெளிப்பாடே நாட்டுப்புறப் பாடல்கள்.

## ஒயிலாட்டம்

தமிழகத்தின் தென்மாவட்டங்களில் இந்தக் கிராமியக் கலை சிறப்புற்று விளங்குகிறது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்களில் இந்தக் கிராமிய நிகழ்ச்சி இடம் பெறும். தற்போது கோவில் திருவிழா தவிர, பொது நிகழ்ச்சிகளிலும் இடம்பெறக்கூடிய முக்கியக் கிராமிய நிகழ்ச்சியாக இது உள்ளது. ஒரு குழுவில் சுமார் 25 பேர் இடம் பெறுவர். நையாண்டி



மேளம் என்று அழைக்கப்படும் வாத்தியக் கருவிகளின் இசைக்கு ஏற்ப இவர்களின் நடனம் இருக்கும். கரங்களில் துணியைப் பிடித்து உயர்த்தி ஒய்யாரமாகத் தாளத்தின் வேகத்திற்கு ஏற்ப இவர்கள் ஆடுவது பார்க்க ரம்மியமாக இருக்கும்.

### சேவையாட்டம்

தர்மபுரி மாவட்டத்திற்கு உரிய தனிக்கலை சேவையாட்டம் ஆகும். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைப் பகுதியில் சேவையாட்டத்தைப் பற்றிய சிறப்பான செய்தி உள்ளது. மாதரி என்ற பெண் தீக்காயமுற்று துன்பத்தால் தவிக்கும்போது, இடையர்கள் அப்பெண்ணின் துன்பத்தைப் போக்க, கடவுளை வணங்கிக் கையில் கோலோடு ஆடிய ஆட்டமே இந்தச் சேவையாட்டம்.

அருந்தமிழ் வளர்த்திட்ட ஔவைக்கு நெல்லிக்கனி அளித்த வள்ளல் அதியமான் ஆண்ட அன்றைய தகடூர்ப் பகுதியாகிய இன்றைய தர்மபுரி மாவட்டத்தில் மட்டுமே இந்த ஆட்டம் ஆடப்பட்டு வருகிறது. இந்த ஆட்டத்தில் பயன்படுத்தப்படும் கோல், தீப்பந்து முதலான கருவிகள் புனிதக் கருவிகளாகக் கருதப்பட்டுக் கோவிலில் வைத்துப் பாதுகாக்கப்படுகிறது.

### கள்ளழகர் ஆட்டம்

தமிழ்நாட்டில் கோவில் நகரம் என்று அழைக்கப்படும் மதுரை மாநகரில் ஒவ்வோர் ஆண்டும் சித்திரைத் திருவிழாவில் கிராம மக்களே வேடம்பூண்டு இந்த ஆட்டத்தை ஆடுவார்கள்.

'கள்ளழகர்' தனது தங்கை அருள்மிகு மீனாட்சியின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க அழகர் மலையிலிருந்து மதுரை நோக்கி வரும்போது மக்கள் இலட்சக்கணக்கில் கூடி வரவேற்பார்கள். தெய்வத்திடம் தங்களது வேண்டுதலை நிறைவேற்ற, இந்த ஆட்டத்தில்' ஆடைகளை கள்ளழகர்போல் அணிந்து ஆடி வருவார்கள். கள்ளழகர்மீது தண்ணீர் பீய்ச்சி அடித்து, தங்கள் அன்பை வெளிப்படுத்து வார்கள். அப்போது அவர்கள் ஆடிவரும் பாங்கு மெய்சிலிர்க்க வைக்கும். இந்த ஆட்டத்திற்கும் கிராமிய இசைக்கருவியான நையாண்டி மேளம்தான் பயன்படுத்தப் படுகிறது.

### கரகாட்டம்

கரகம் என்பது, பூரண கும்பம் போன்ற வடிவுடைய அமைப்பு. இதைப் பல்வேறு விதங்களில் அலங்கரித்து வைத்து, தலையில் வைத்துக்கொண்டு ஆடிடுவதாகும். பல்வேறு மெய்ப்பாடுகளைக் காட்டி ஆடும்போது, பக்க வாத்தியங்கள் பலவும் கேட்போரைப் பரவசமூட்டும் வகையில் அமைந்திருக்கும்.

அப்படியெல்லாம் ஆடும்போது கூட, தலையில் வைத்திட்ட அந்தக் கரகம் விழுந்து விடாமல் ஆடிட வேண்டும். நளினமான நாட்டுப்புறக் கலையான கரகம் தமிழகத்தில் கோவில் விழாக்களிலும், பிற சமூக விழாக்களிலும் சிறப்பிடம் பெறுகிறது.



## கவின்மிகு காவடி ஆட்டம்

காவடி என்பது, வளைந்த அரை வடிவமுடைய, சற்றொப்ப, நாணேற்றிய வில்லின் அமைப்புடையது. அதன் நீளம், ஒரு சராசரி மனிதனுடைய தோள் அளவைவிடச் சற்று அதிகமாக இருக்கும். அதன் விட்ட வடிவு இரண்டடி அளவுக்கு இருக்கும். அதை மயில் இறகு மற்றும் சில கண்ணுக்கழகான பொருள்கள் பலவற்றை வைத்து அலங்கரித்திடுவர்.



அதில் தமது வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் சிறு சிலைகள் அல்லது படங்கள் வைக்கப்பட்டிருப்பதும் உண்டு. பொதுவாகத் தன் வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் மீதான பாட்டுகள் அமைத்து இசை கூட்டிப் பாடுவார்கள்.

இதனைப் பாடிடும்போது, செவிக்கினிய இசைக் கருவிகளின் இசையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

## காளையாட்டம்


காளை வீரத்திற்கும் வலிவுக்குமான அடையாளச் சின்னம். ஒரு வீரனின் நடையைக் காளையின் நடைக்கு ஒப்பிடுவது நம் இயல்பு. மயிலின் சாயலைப் பெண்ணுக்கு ஒப்பிடுவது போல ஆணின் செம்மாந்த தோற்றத்துக்குக் காளையை ஒப்பிடுவது தமிழர் மரபு.

காளை போன்ற வேடம் கட்டி இசைக்கேற்ப ஆண்கள் நடனம் ஆடுவார்கள். இதைத்தான் காளை ஆட்டம் என்கிறோம். இதற்குத் துணையாக அமையும் இசை வாத்தியம் நையாண்டி மேளம். தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில்- குறிப்பாக நாட்டுப்புறக் கோயில் திருவிழாக்களில் காளை ஆட்டம் ஆடப்படுகிறது.

## பொய்க்கால் குதிரை

பயணம் மேற்கொள்ளுவதற்கான விலங்குகளின் காலமைப்புகளில் வித்தியாசமான வடிவங்கள் கொண்டவை ஒட்டகம், குதிரை ஆகியவற்றின் குளம்புகள், பிளவு இல்லாத குளம்புகள். அந்தக் கால் நுனி அமைப்புடைய கட்டையை, மனிதன் தன் பாதங்களில் கட்டிக்கொண்டு நடப்பதே கடினம். நிலைமை அப்படியிருக்க, அதை மனிதனின் பாதங்களில் கட்டிக்கொண்டு பொய்க்கால் கொண்ட குதிரையாக மனிதன் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதைக் கண்டால் நாம் ஆச்சரியத்திலாழ்ந்து விடுவோம். கட்டைகளைப் பாதங்களில் கட்டிக் கொண்டு ஆடும் மனிதன், குதிரையின் உடலமைப்பை, பொம்மையால் செய்து, தன் இடுப்பில் கட்டிக் கொண்டு ஆடுவது கவின்மிகு காட்சியாயிருக்கும்.

தவில், உறுமி, நையாண்டி, மேளங்கள் முழங்க அவற்றோடு நாயன இசையொலியுஞ் சேர்ந்து கிளர்வூட்டும் இசைக்கு, அந்தக் குதிரை வடிவத்தைத் தாங்கிய மனிதர்கள் ஆடுவது அனைவரையும் மகிழவைக்கும்





வியப்புக்குரிய கலை நிகழ்ச்சியாகும். ஆணும் பெண்ணும் இந்த ஆட்டத்தை ஆடுவர். தமிழகத்தில் நிகழ்வுறும் திருவிழாக்கள் சிறக்க, இந்தப் பொய்க்கால் குதிரை ஆட்டமும் ஒரு தவிர்க்க முடியாத அங்கமாகி விட்டது.

### மயிலாட்டம்

மயிலாட்டம் தமிழகத்தின் தென் மாவட்டக் கிராமங்களில் கோயில் திருவிழாக் களிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் இடம்பெறும் நாட்டுப்புறக் கலையாகும்.

இந்த ஆட்டம் ஆண்களும் பெண்களும் மயில்வேடம் அணிந்து இசைக்கருவிகளுக் கேற்ப நளினமாக ஆடப்படுவதாகும். பரத நாட்டியக் கலைஞர்களும் மயிலாட்டம் ஆடுவது தற்போது வழக்கமாகி வருகிறது.



### புலியாட்டம்

புலி வேடம் புனைந்து வண்ணங்களால் உடம்பில் வரிகளை வரைந்துகொண்டு, ஆடப்படும் புலியாட்டம், கிராமங்களில் மக்கள் மனம் கவர்ந்த ஆட்டம் ஆகும்.

கூட்டமாய் வரும் இந்தப் புலிகள் பாயும் புலிகள் அல்ல; வெறும் பாய்ச்சல் காட்டும் புலிகள். பதுங்குவது போலவும், பாய்வது போலவும் இவை பாவனை காட்டும். கிராமங்களில் மாரியம்மன் திருவிழாக் காலங்களில் புலியாட்டம் நடைபெறும்.

இதற்குரிய இசைக்கருவிகள், தாரை மற்றும் தப்பட்டை ஆகும்.

### வீர விளையாட்டுக்கள்

தமிழ்நாட்டில் உடல்திறம் காட்டி விளையாடும் வகையைச் சேர்ந்தவை இந்த வீரவிளையாட்டுகள். இதில் குச்சி விளை யாட்டு, கத்திச் சண்டை, சுருள் கத்திச் சண்டை போன்றவையுண்டு.

இந்த விளையாட்டுகளுக்கு, பரத நாட்டியக் கலைபோன்று, முறையான, நெறிமுறைகளும் பயிற்சியும் உண்டு. அவற்றை முறையாக இரு தரப்பினரும் பயிற்சி பெற்று, அதன்பின்னர் விளையாடத தொடங்கினால், அவற்றைப் பார்ப்பதற்கும் அழகாயிருக்கும். மனிதனுக்குத் தக்க தற்காப்பாகவும் உதவிடும்.

### கொம்பு முழக்கம்

பண்டைத் தமிழகத்தின் வீரத்தின் வெளிப்பாட்டை அறிவிக்கும் சின்னமாக இது விளங்கியது. தற்போது கிராமங்களில் நடைபெறும் கோவில் திருவிழாக்கள் குடமுழக்கு விழாக்கள், கதிர் அறுப்பு, மஞ்சு விரட்டு, ஊர்வலங்கள் போன்றவற்றில் இது இடம் பெறுகிறது.

மூச்சை உள்ளிழுத்து ஒருவித இசையுடன் இந்த ஒலி எழுப்பப்படுகிறது. அறிவிப்புத் தரும் எழுச்சிக் கருவியாக இது விளங்குகிறது.

### தாரை, தப்பட்டை

தமிழ்நாட்டின் ஒவ்வொரு கிராமங்

களிலும் ஊடுருவி உள்ள இசை ஆட்டம் இது. கிராமங்களில் நடைபெறும் திருவிழாக்கள், ஊர்வலங்கள், ஒவ்வொரு இல்லத்திலும் நடைபெறும் எல்லா விசேடங்களுக்கும் இந்த ஆட்டம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு குழுவில் 15 பேர் இருப்பார்கள்.

கேட்கக்கேட்க இசையில் தங்களையே மெய் மறந்து ஒன்றிடச் செய்யும் சக்தி பெற்றது இந்த ஆட்டம். வயது வேறுபாடின்றி அனைவரும் இந்த இசைக்கு மயங்குவார்கள்.

**நையாண்டி மேளம்**

தென் மாவட்டங்களில், அதிகம் விரும்பப்படுகின்ற நாட்டுப்புற இசை நையாண்டி மேளமாகும். கோவில் திருவிழாக்களில் நையாண்டி மேளத்தை நாம் நிச்சயம் கேட்கலாம். நற்காரியங்கள், ஊர்வலம் போன்றவற்றிலும் இவை இடம் பெறும்.

இசை நிகழ்ச்சிகள் பொதுவாக மகிழ்ச்சியூட்டும். ஆனால் நையாண்டி மேளம் கேட்பவர்க்கு ஒரு விதமான களிப்பை உண்டாக்கும்.

நையாண்டி மேளத்தில், தமுக்கு, தவில், நாதசுரம், பம்பை, உறுமி, தாளம் ஆகிய அறுவகை இசைக்கருவிகள் இடம் பெறுகின்றன.

'நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கு
எழில்ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும்
இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந்
தமிழணங்கே!
சீரிள்மைத் திறம்வியந்து செயல்மறந்து
வாழ்த்துதுமே.

**—மனோன்மணீயம் பெ. சுந்தரம்பிள்ளை.**



# நாடகக் கலை!



நாடகக் கலைக்கு ஏனைய கலைகளைக் காட்டிலும் அபூர்வ சக்தியொன்றுண்டு. மக்களை உடனடியாகச் செயலில் இறங்கச் செய்வது நாடகக் கலைதான். இதனால்தான் நாகரிக நாட்டினர், தங்கள் சீர்திருத்தக் கொள்கைகளைப் பிரசாரம் செய்வதற்கு நாடகங்களைக் கருவியாக உபயோகித்து வந்தார்கள், வருகிறார்கள், வெற்றியும் கண்டார்கள்.

**-கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன்**



# இசையைப் போற்றுவோம்!

**- முதல்வர் கலைஞர்**

இசை 2000 ஆண்டுகளுக்கு முன்பே போற்றப்பட்ட ஒன்று, மக்களுக்கு அறிமுகமான ஒன்று. அதனால்தான் திருவள்ளுவருடைய குறளில்


**"குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்"** என்ற அந்தக் கருத்தைக் காணுகிறோம். குழலும், யாழும் இனிது என்று யார் சொல்வார்கள்என்றால் நம்முடைய குழந்தைகளின் மழலைச் சொல்லைக் கேட்காதவர்கள் தான் குழலும் யாழும் இனிமையானது என்று சொல்வார்கள் என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறா ரென்றால், அதற்கு என்ன பொருள்? வள்ளுவர் காலத்திற்கு முன்பே குழலும், யாழும் புழக்கத்திலே இருந்தது என்பதுதான் பொருள். 2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பே, சங்கக் காலத்திலேயே இந்தச் சமுதாயத்திற்கு அறிமுகமான இசை, எப்படி காட்டுமிராண்டிகளாக இருந்த சமுதாயத்தில் இந்த இசைப் பண்பாடு தோன்றியது, வளர்ந்தது என்பதெல்லாம் இயற்கையின் நியதி. இயற்கையாகவே இது கிடைத்தது. இயற்கை தந்த கொடை.

காளிதாசன் குறிப்பிட்டதைப் பற்றி இதே மன்றத்தில் நான் ஆற்றிய ஒரு உரையிலே முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். மூங்கில் மீது வண்டு துளைக்க அப்படி துளைக்கப்பட்ட அந்தத் துளையில், காற்று புக, அதன் காரணமாக ஒலி எழும்ப, அதைப்பார்த்த மனிதன், ஓகோ இப்படி மூங்கில் கம்பை எடுத்து, துளை போட்டு, அதற்குள்



காற்றைச் செலுத்தினால் ஒலி வரும்போலும் என்று கண்டுபிடித்து உருவானது தான் புல்லாங்குழல். அந்தப் புல்லாங்குழல் மூலமாகத்தான் நம்முடைய ரமணி அவர்கள் புகழ்பெற்று இங்கே வீற்றிருக்கிறார்கள்.

அந்தக் காலத்திலே மனிதர்கள் காட்டுமிராண்டிச் சமுதாயத்தில் உணவுக்காக விலங்குகளை வேட்டையாடி அதன் மாமிசத்தை உண்டுவிட்டு அந்த விலங்குகளின் தோல்களை அங்கேயுள்ள மரங்களிலே காயப் போட, அப்படி அந்த, தோல்கள் காய்ந்து கொண்டிருக்கும்போது, காற்றில் அந்த மரத்திலே உள்ள கொம்பு அசைந்து, அசைந்து அந்த தோலிலே பட்டுப் பட்டு, அதிலே ஒரு நாதம் எழும்ப , அதைப் பார்த்த அந்தக் கால மனிதன் ஓகோ, இப்படி தோலைக் கட்டி அதிலே கொம்பினால் அடித்தால் நாதம் கிளம்பும் போலும் என்று எண்ணியதுதான் இன்றைக்கும் நாம் காணுகின்ற மத்தளம், தவில், முரசு இவைகள் எல்லாம். இப்படித்தான் இயற்கை வழங்கிய கொடையாக இசை நமக்குக்கிடைத்தது.



இயல், இசை, கூத்தில், இசை நாட்டியம் இல்லாமல் பிறப்பதில்லை. நா அசைந்தால் தான் இசை, நா அசைந்து நாட்டியமாட வேண்டும். இசை புறப்பட! அதே போல, ஒரு பிடில் வாசிப்பதாக இருந்தால்கூட அந்தப் பிடிலுக்கான நாதத்தை எழுப்ப அதனுடைய கம்பி அசைய வேண்டும். எனவே அசைவு இல்லாமல் இசை இல்லை. ச என்று சுரம் பாடப்படும்போது நாக்கு நம்மை அறியாமலேயே அசைகிறது. ரி எனும்போது நாக்கு அசைகிறது. க எனும்போது நாக்கு அசைகிறது. ம எனும்போது உதடு ஒட்டி, பிரிந்து அசைவதால் தான் ம வே பிறக்கிறது. இப்படி அசைவிலே தான் இசை பிறக்கிறது. எனவே நாட்டியத்திலே தான் இசை பிறக்கிறது. என்பதை நாம் ஒழுங்காக ஒத்துக்கொள்ளவேண்டும்.



இயற்கை, இசையை வழங்கிக் கொண்டிருக்கின்றது. இயற்கையின் மறு உருவம்தான் இசை. திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி பாடினால், அது தென்றல்! இசை, இயற்கை, இசை; அவர்கள் பாடினால் தென்றலாக இருக்கின்றது. எஸ்.ஜி.கிட்டப்பா கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள வகை கிடைத்த குளிர் தருவே என்று ஓங்கி உரத்த குரலிலே பாடினால், அது இடி! அதுவும் இயற்கை தானே? வலையப்பட்டியும் அரித்துவாரமங்கலமும்தனித்தவிலிலே மோதிக்கொண்டால், அது பேரிடி, புயல் எல்லாமே. செம்மங்குடி பாடினால் அது அளவான மழை. இப்பொழுது பொழிகின்ற மழையல்ல ரமணி புல்லாங்குழல் வாசித்தால், அது குற்றால அருவியின் சாரல். இவ்வளவு சிறப்புக்களை சொல்கிற இசையைப் பற்றிச் சொல்கிற நீ இசைவாணனா என்று கேட்டால் நல்லவேளையாக இல்லை. இருந்தால் இங்கேயும் குழப்பம் செய்துகொண்டிருப்பேன். அதனால் நான் இசைவாணனாக இல்லை. ஆனால் இசைக் குடும்பத்திலே நான் பிறந்தவன்.

என்னுடைய தந்தை பெரிய இசைவாணர். சித்த வைத்தியரும்கூட, புலவரும்கூட, வடமொழிப்புலவரும்கூட, ஆனால் நான் இசைத் துறையிலே இல்லாததற்குக் காரணம், என்னை இசை பயில அதிலும் நாதசுரம் பயில என்னுடைய உறவினர் வீட்டிலே தந்தை கொண்டுபோய்விட்டார். அப்பொழுதுதான் ஆரம்பப் பள்ளிக்



கூடத்திலே திருக்குவளையில் படித்துக்கொண்டிருக்கிறேன். அந்த சில நாட்கள் அந்தப் பாடம் கற்கச் சென்றேன். கிட்டத்தட்ட நாதசுரத்திலே வர்ணம் வரை வாசிக்கக்கூடிய அளவிற்கு வந்தேன். ஒருநாள் திடீரென்று இதை வேண்டாமென்று விட்டுவிட்டேன். காரணம், எங்கள் திருக்குவளை கிராமத்தில், தர்மபுரம் ஆதீனத்திற்கு சொந்தமான ஒரு மடாலாயம் உண்டு. திருக்குவளையிலே உள்ள கோவில், தர்மபுரம் தேவஸ்தானத்திற்குரியது. அந்தக் கோவிலிலே ஒரு தம்பிரான் சாமியார் உண்டு. தர்மபுரம் ஆதீனகர்த்தரின் பிரதிநிதியாக அவர் அங்கேயேயிருந்து காரியங்களை ஆற்றிக் கொண்டிருப்பார். அந்தக் காரியங்களை ஆற்றுவதற்கு, அந்த ஊரைச் சேர்ந்த ஒரு காருவார் மேட்டுக்குடியிலே பிறந்தவர், முதலியார் வகுப்பைச் சேர்ந்தவர் இருந்தார் அந்தக் கார்வார் தெருவிலே வந்தால், வண்டியிலே போனால், ஆலயத்திற்குள் நுழைந்தால், இந்த இசைவாணர்கள் யாராக இருந்தாலும், நாதஸ்வரமோ, தவிலிலோ வாசிப்பவர்களாக இருந்தாலும், தங்கள் மேலே போட்டிருக்கின்ற துண்டையெடுத்து, இடுப்பிலே கட்டிக் கொள்ளவேண்டும். இந்தக் காட்சியை ஒரு நாள் நான் பார்த்துவிட்டேன், பார்த்தவுடன் ஓகோ, இதிலே நாம் வித்வானாக ஆனால், துண்டு போட முடியாது போலும் என்று அன்று நான் கருதினேன். அதனால் இப்போது எனக்கு நிறைய துண்டுகள் கிடைத்துக் கொண்டிருக்கிறன.



இரண்டு நாட்கள் என் தந்தை என்னைக் கடிந்தும்கூட அந்த வித்தையைக் கற்றுக்கொள்ள நீ செல்லவேண்டுமென்று கூறியும் கூட, சுயமரியாதை இல்லாத தொழிலுக்கு நான் செல்ல மாட்டேன், அது சுயமியாதை இழக்கச் செய்கின்ற வித்தையாக இருக்கின்ற காரணத்தால் நான் அதைக் கற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டேன். இன்றைக்குத் திடீரென்று நான் முதலமைச்சராக ஆகிவிட்ட காரணத்தால் நான் சொல்வதையெல்லாம் நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையிலே இங்கே சொல்கின்ற விஷயமல்ல இது. நான் எழுதியுள்ள 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்த கத்திலே என்னுடைய வாழ்க்கை வரலாற்றில் இதனைக் குறிப்பிட்டிருக்கிறேன்.



**சுயமரியாதையை உருவாக்கிய திருவாடுதுறை ராஜரத்தினம்**

இந்த இசைவாணர்களுக்கு சுயமரியாதை வரக்கூடிய, அவர்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலையை, இந்த இசைவாணர்கள் உலகத்தில் உருவாக்கிய பெருமை திருவாடுதுறை ராஜரத்தினம் அவர்களுக்குத் தான் உண்டு என்பதை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.


இப்படி மரியாதைக்குரிய ஒரு காலத்திலே மன்னர்களால் போற்றப்பட்ட சங்க காலந் தொட்டு வழங்கி வருகின்ற பெருமைக் குரிய இந்த இசையை இன்றைக்கு நாம் மேலும் மேலும் போற்றிட வேண்டும். இசையில் குழலிசை என்றால் அதற்கு மொழிப்பாகுபாடு கிடையாது. ஆனால் பாடல்கள், சாகித்தியங்கள், இவைகளுக்கு மொழி தேவைப்படுகிறது. நான் அதற்காக இந்த இடத்தில் தமிழிசைப் பிரச்சாரம் செய்ய வந்திருப்பதாக நீங்கள் [illegible]கூடாது. கர்நாடக இசையைப் போற்றிப் பாராட்டுகின்ற இ[illegible]ந்த இடம் என்பது எனக்குத் தெரியும். அதற்கு நான் விரோ[illegible], பகைவனுமல்ல.


கர்நாடக இசை என்பதே தென்புலத்தில் இருக்கிற தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய பகுதிகளிலே புழங்குகின்ற இசைதான் கர்நாடக இசை. கர்நாடக இசை என்றதும் அது ஏதோ பழைய காலத்து மைசூர் இசை என்று யாரும் கருதத் தேவையில்லை. அப்படிக் கருதினால் அந்த இசையைக் கூட இங்கே அவர்கள் தருவார்களோ தர மாட்டார்களோ என்ற அச்சமும் நமக்கு ஏற்படும்.

கர்நாடக இசை தென் புலத்திலே உள்ளவர்கள் பயின்ற இசை. அவர்கள் இன்றைக்குப் புகழத்தக்க அளவிற்குப் பரப்பியுள்ள இசைதான் இந்த இசை. இன்றைக்கும் இந்த இசையைத்தமிழகத்திலே உள்ளவர்கள், தென்புலத்திலே உள்ளவர்கள், அதற்குரிய இலக்கண சுத்தமாக அச்சரம் பிசகாமல், தாளம் தவறாமல், ராகம் கெடாமல் அவர்கள் பயன்படுத்துகின்ற அந்த அறிவொளிகளாகத் திகழ் கிறார்கள். இசைச் செல்வங்களாகத் திகழ்கிறார்கள்.

சில இசைகளை கேட்கிறோம். வெளிநாட்டிலிருந்து எல்லாம் வருகிறது இசை. மைக்கேல் என்கிறார்கள் ஜாக்சன் என்கிறார்கள் ஒரே காட்டுக் கத்தலாக இருக்கிறது. அதைப் பார்க்க இலட்சக்கணக்கிலே மக்கள் கூடுகிறார்கள். அதற்குப் பெரிய விளம்பரங்கள் எல்லாம் வருகிறது. ஆனால் அந்தக் காட்டுக் கத்தலுக்கு இடையே மாலியின் புல்லாங்குழல் ஆனாலும் ராஜரத்தினம் நாதஸ்வரம் ஆனாலும் ரமணியின் புல்லாங்குழல் ஆனாலும் இவைகள் எல்லாம் ஒலிக்கத் தொடங்கினால் அவை இருக்கும் இடம் தெரியாமல் போய்விடக்கூடிய அளவுக்குச்சிறப்பு வாய்ந்தவை நம்முடைய இசை என்பதை நினைவூட்டி இசைவாணர்கள் பலரும் சூழ்ந்திருக்கின்ற இந்த மாமன்றத்திலே அருமைச் சகோதரர் ரமணி அவர்களை நானும் வாழ்த்தி என்னுடைய தொடக்க உரையை நிறைவு செய்கிறேன்.

***-மியூசிக் அகாடமியின் 70-ஆம் ஆண்டு விழாவில் 15.12.1996 அன்று ஆற்றிய உரையிலிருந்து.***





# பவளக்கால் நூலான்

## கே.சி.எஸ். அருணாசலம்

அன்று சனிக்கிழமை, காலை நேரம் - வைகாசி மாதம்.

காலில் ஏதாவது வாதவலிப்பு ஏற்பட்டுச் சனிக்கிழமை வரத் தவறினாலும் தவறலாம். மருதாக் கவுண்டருக்கு எண்ணெய்க் குளிப்பு மட்டும் தவறாது. கடந்த பத்தாண்டுக் காலமாகக் கவுண்டர் வேலப்பன் எண்ணெய் தேய்த்து விட்டுத் தான் குளியலைச் சுகமாக நடத்தி வருகிறார். கிழக்கு வானத்தில் நரை வெளுக்கும்போதே சனிக்கிழமை களில் அவர் எண்ணெய்க் கிண்ணத் துக்கு எதிரில் தயாராக உட்கார்ந் திருப்பது வழக்கம். மணிக்கணக் காகக் குளிக்கத் தோட்டம் தான் அவருக்கு வசதி.

தோட்டத்துச் சாலையில் சீரக மிட்டுக் காய்ச்சிய கால்படி நல்லெண்ணையைக் கவுண்டரது சேகேறிய உடம்பில் விதவிதமான பிடிகள் போட்டுத் தேய்த்து விட்டு உச்சந்தலையில் பல்வேறு ஜதி வரிசைகளுடன் தட்டிக் கொஞ்சம் கொஞ்சமாகக் கிண்ணத்தைக் காலி செய்து கொண்டிருந்தான் வேலப்பன்.

புருவத்தை நனைத்து இறக்கத் தில் வடியத் தொடங்கிய எண்ணெயை வலக்கையால் வடித்துவிட்டுத் தலைநிமிர்ந்த கவுண்டர் "வேலா! என்ன இன்னிக்கி போடு போடுன்னு போடறியே?" என்று கேட்டார். கச்சேரி மேளம் கட்டிக் கொண்டது போலிருந்த சுகத்தில் வெளுத்துக் கட்டிக் கொண்டிருந் தவன், தன் தாள வரிசைக்கு அவரது உச்சியில் ஒரு முத்தாய்ப்பு வைத்து நிறுத்தினான். ஏதேனும் சில சமயங்களில் இப்படிப் பெரிய ஆவர்த்தனம் நடத்தி விடுவது அவனுக்குப் பழக்கமான வேலை. கண்ணை மூடுவதும் திறப்பதுமான அமர்ந்த கவுண்டரின் தோற்றம், எண்ணெய் அபிஷேகத்திலிருக்கும் பிள்ளையார் சிலைபோல் தோன் றிற்று. இத்யாதி அடிதடியுடன் குளித்தால் தான் கவுண்டருக்கும் எண்ணெய் குளித்த திருப்தி ஏற்படும்!

வேலப்பன் பேசத் தொடங் கினான்!

"ஐயா அவங்களுக்கல்லங்க...."

"ஊம்...."

"இந்த வாரத்திலே தாசில்தார் எஜமான் நம்ப ஊர்ப் பக்கம் வருவாருன்னு மணியக்காரர் சொன்னாருங்க..."

"வந்தா வந்திட்டுப் போறாரு. அமாவாசைக்கும் அப்துல் காதருக் கும் என்னடா சம்பந்தம்?"

"காட்டிலே ஒரு பக்கம் நல்ல நீரோட்டம் இருக்குமுங்க. அதனாலே கெணறு வெட்டறத்துக்குக் கடன் கேட்டு விண்ணப்பம் போட்டுக் கெடப்பிலே கெடக்குது. நகர மாட்டேங்குது. அவர் வாரப்ப ஒரு வார்த்தை சொல்லி வெச்சா, நிமிஷத்துலே நடந்திடுங்க. கவரு மெண்டிலே கடன் வாங்கறத் துக்குள்ளே நாலு கல்யாணம் செஞ் சிடலாம் போலிருக்குதுங்களே!"

உட்கார்ந்திருந்த கவுண்டர் தரையைப் பார்த்துக் குனிந்தபடி முதுகை வளைத்துக் கொடுத்தார். வேலன் இடுப்புவரை தேய்த்து நெளிவெடுக்கும் பொருட்டு, கைகளைத் தரையில் ஊன்றிய படியே வேலனிடம் பேசத் தொடங்கினார்.

"ஊம்... பண்ணிப்போடுவே நாலு கல்யாணம். பொண்ணு வீட்டுக்கு நாலு நடை நடந்து பரிசம் போட்டு, வெத்திலை பாக்கு மாத்தி ஊர் கூடிச் செக்கு தள்ளாமே கல்யாணம் ஆயிடுமாடா, வேலா? அப்படித்தான் கச்சேரியிலே விண் ணப்பம் போடறதும் போட்டுட்டு வூட்டுத் திண்ணேலே உக்காந்திட்டி ருந்தா, குட்டிச் சாத்தான் வந்தா வேலை பண்ணும் கச்சேரியிலே? அங்கங்க போய்ப் பண்ணற சீர் சிறப்பெல்லாம் பண்ணினாத்தான் விண்ணபத்துக்குக் காலு கையெல் லாம் மொளைக்கும், மடப்பயல் தாசில்தாரு வந்தாச் சொல்றேன் போ... அப்புறம் பார்க்கலாம்... என்ன"

கவுண்டர் சொன்னது இப் போது வேலன் காதில் விழவில்லை. அவன் கவனமெல்லாம் சாலைப் பக்கமாக இரையெடுத்துக் கொண் டிருந்த ஓர் அழகான சேவலின் மீது பதிந்திருந்தது. மலர்ச்சி நிறைந்த கண்களோடு அதையே உற்றுப் பார்த்தவனாக, கவுண்டரது பிடரி மேல் கைவைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

நிமிர்ந்து பார்த்த மருதாக் கவுண்டருக்கு விஷயம் புரிந்து விட்டது. கொண்டையை ஆட்டி ராஜநடை போட்டுக் கொண்டி ருந்தது அந்தச் சேவல்.

"அதைச் சொல்லு, தேய்க்கறதை விட்டுட்டுச் சேவலைப் பாத்து

முளிச்சிட்டு நிக்கறயா! கெணறு வெட்டறனாம் கெணறு..." என்று எரிச்சலுடன் கூறினார் அவர்.

இந்தப் பேச்சைக் கேட்ட பிறகுதான் வேலப்பனுக்குச் சொரணை வந்தது.

களத்து அடுப்பிலே பண்ணைக் காவலாள் பருத்தி விளாறு போட்டு வெந்நீருக்குச் சொக்கப்பனைக் கொளுத்திக் கொண்டிருந்தான்.

இரண்டு கைகளாலும் பிடரி யிலிருந்து தொடங்கி இடுப்புவரை அழுத்திச் சென்றபடியே வேலன் மறுபடியும் பேசத் தொடங்கினான்.

"ஐயா, அவங்களுக்கல்லங்க"

"சொல்லு!"

"அந்தச் சேவல் கோழி...!"

கவுண்டருக்குச் சிரிப்பு வந்து விட்டது. அப்படிக் கேட்பான் என்று! அவர் எதிர்பார்த்திருந்தார்.

"நீ கண்ணு வெச்ச போதே நெனைச்சேன். உனக்கு வேணு மாக்கும் சேவக்கட்டுக்கு... ஊம்...?"

மசச் சிரிப்புச் சிரித்துத் தன் மனத்தைப் புலப்படுத்தினான் வேலன்.

"எடுத்துக்க, போ!"

குழந்தைபோல் கவுண்டர் முன்னிலையிலேயே மகிழ்ச்சியாய் எகிறிக் குதித்து விட்டான் வேலப்பன். அவர் குளிப்பதற்காக எழுந்தார். வேலன் ஓடிப்போய் லாவகமாக சேவலைப் பிடித்து நோட்டம் பார்த்தான். "நா நெனச் சாப்பலே இது பவளக்கால் நூலான் தானுங்க..." அவரைப் பார்த்துக் கூறினான். 'பவளக்கால் நூலான்' 'பச்சைக்கால் செங்கோரி', 'மரக தப்புள்ளி' என்று சேவல்களில் உள்ள ஜாதிப் பிரிவினை எல்லாம் வேலனுக்கு மனப்பாடம்.


"நூலானோ? காளானோ? எங்கிட்டே என்னத்துக்கு அளக்கிறே? தண்ணி ஊத்த வாடா, முளிக் கிறான் நின்னுக்கிட்டு பொளைக்கத் தெரியாத பசங்க."

குளிப்பதற்கு வெந்நீர் அடுப் பருகே போட்டிருந்த செங்கல் தொட்டியிலே போய்க் கவுண்டர் உட்கார்ந்தார். 'கை பொறுக்காத சூட்டை அவருடல் எப்படித்தான் பொறுக்கிறதோ' என்று நினைத்த வனாக, ஆவி கிளம்பும் வெந்நீரை எடுத்து ஏழெட்டுச் செம்பு அவர் தலையில் கொட்டி அரப்புக் கலந்து தேய்க்கத் தொடங்கினான்.

"நம்ம சின்னம்மிணி புருஷன் இல்லேடா வேலா?"

"ஆமாங்க"....

"அவனும் இப்ப சேவக்கட்டுக்குப் போறானாம். புள்ளே சொல்



லிச்சு... எப்பிடியிருக்குது குடியான வன் பொளப்பு?"

வேலன் அதற்குப் பதில் ஒன்றும் பேசவில்லை. ஒரு வழியாய்க் கவுண்டர் குளித்து எழுந்தபோது, தற்செயலாக வெளியே பார்த்த வேலன் அசந்து போனான். சாலை யோரத்தில் கவுண்டர் குறிப்பிட்ட அவரது சின்ன மருமகன் அந்தச் சேவலைப் பிடித்து நோட்டம் பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

"சின்ன மாப்பிள்ளை வந்திருக் காருங்க".

துண்டால் தலை துவட்டிக் கொண்டிருந்தவர் திரும்பிப் பார்த்த போது, அவன் சேவலை விட்டு விட்டு வந்து கொண்டிருந்தான். நல்ல சிவட்ட கிராப், சில்க் சட்டை, வேட்டி, மோதிரம், கடிகாரம் கட்டிய கை, இருபத்தைந்து வயதின் இளமைப் பொலிவு.

"ஆமாம்? வந்து ரெண்டு நாளாச்சு" என்றார் பெரியவர்.

மாமனாருக்கு மரியாதையாகச் சற்று தூரத்திலேயே நின்றபடி பேசத் தொடங்கினான் மாப் பிள்ளை.

"நாளைக்கு ஊருக்குப் போகும் போது, இந்தச் சேவலை நான் புடிச்சிட்டுப் போறேனுங்க மாமா!"

தூரத்தில் நின்றபடியே மிகவும் விநயமாக, ஆனால் நேரடியாகவே சின்ன மாப்பிள்ளை கேட்டு விட்டான். இப்படி அவன் நேருக்கு நேராகத் தன்னைக் கேட்டு விடு வான் என்று கவுண்டர் துளியும் எதிர் பார்க்கவில்லை.

மாப்பிள்ளை பெரிய பணக் காரன், ரொம்பவும் மானியும் கூட, தங்கை மகன்... மாமனாரிடமிருந்து எதையும் எதிர் பார்க்கும் சுபாவம் அவனுக்குக் கிடையாது. இருந் தாலும் இந்த அற்ப விஷயத்தைக் கேட்டு விட்டான்.


பதிலே பேசாமல் ஒரு நிமிடம் கழிந்தது. துவைத்த வேட்டியைக் கட்டிக் கொண்டு சாலையிலிருந்த கயிற்றுக் கட்டிலில் போய் உட் கார்ந்தார், கவுண்டர். தர்ம சங்கடமான ஒரு நிலையில் தான் மாட்டிக் கொண்டதுபோல் தோன் றின்று. ஒரு நிமிடம் ஒருவருமே பேசவில்லை. பிறகு அவரே பதில் கூறினார்.

"பொன்னூ! நீ கேட்ட நேரம் சரியில்லை."

மாப்பிள்ளைக்கு அவர் சொன்னது புரியாமல் வியப்புடன் அவர் முகத்தைப் பார்த்தான். தன் மாமனாரா இப்படிச் சொல்லுவது?

"நீ வர்ரத்துக்குக் கொஞ்ச நேரம் மிந்தித்தான் வேலப்பன் இந்தச் சேவலை வேணும்னு கேட்டான். புடிச்சிக்கிட்டுப் போன்னு வார்த்தை சொல்லிட்டேன்".

தன் வார்த்தை செல்லாக் காசாகி விடக்கூடாது என்ற



அழுத்தம் அவர் பதிலில் தெளி வாகப் பதிந்திருந்தாலும், மருமகன் என்பதற்காகக் குரலில் ஓர் இளக் கமும் கலந்து இருந்தது.

வேலப்பன் முகத்தை மாப் பிள்ளை பார்த்தான். அவன் அடித்து வைத்த சிலையைப் போல் நின்று கொண்டிருந்தான். ஓர் எக்கச்சக்கமான நிலையில் அவன் தவித்துக் கொண்டிருந்ததை முகம் பிரதிபலித்தது. இருந்தாலும், மாப்பிள்ளையும் விட்டபாடில்லை. "அவனுக்கு என்னத்துக்கங்க? நான் புடிச்சிட்டுப் போறேனுங்யா". தலை குனிந்தபடியே சின்ன மாப்பிள்ளை மீண்டுத் தனி அவலை வற்புறுத்தி விட்டான். கவுண்டர் முகம் கறுத்தது. அவனை உற்றுப் பார்த் தார். மறுபடியும் சில நிமிட நேரம் மௌனம் நிலவிற்று.

"பொன்னு!"

மாமனார் குரலுக்கு அவன் நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த் தான்.

"வேலனுக்கு வார்த்தை கொடுத் திட்டேன்னு சொன்னப்புறம், திருப்பிக் கேட்டிருக்கப்படாது. தான் சொன்ன வார்த்தையைத் தானே முதல்லே மதிச்சு நடந்தாத்தான், மத்தவன் அதை மதிப்பானில் லையா? நம்ம காலைச் சுத்திக் கிட்டிருக்கிற கூலி நாலிகிட்ட நாம்ம வார்த்தை செலாவணி யாகாம நடந்திட்டா, குடியான வனுக்கு என்னப்பா மதிப்பிருக்கும்? நீயே சொல்லு? பட்டியிலே இருக்கிற நாய் குலைச்சாக் கூட யாரோ வராங்கண்ணு ஒரு அர்த்தமிருக்கு தில்லே? மனுசன் வார்த்தைக்கு அந்த யோக்யதைகூட இல்லாமப் போனா பொளைச்சென்ன புண்ணியம்? இதெல்லாம் தெரிஞ்சு நம்மதான் நடந்துக்கணும். எதைப் பெரிசா எடுத்துக்கணுமோ அதைத் தான் பெரிசா எடுத்துக்கணும் நாம்".

கவுண்டரது வார்த்தைகள் ஆத்திரமில்லாமல் இதமான குரலில் வெளிப்பட்டாலும் கூட, அசைக்க முடியாத கறார்த்தன்மை தன் மானத்தின் மேல் வைத்திருக்கும் பிடிவாதம் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன.

தரையைப் பார்த்தபடியே நின்றிருந்த மாப்பிள்ளை முகம் நிமிஷ நேரத்தில் சுண்டிப் போயிற்று. அவரது போக்குகள் அவனுக்குத் தெரியாதவை அல்ல. தன்னையறியாமலேயே கேவலம் ஒரு சேவல் மீது வைத்த ஆசை யினாலே இந்த நிலைக்கு ஆளாகி விட்டான். அனுபவமற்ற வாலிபம். மேலும் பணக்காரப் பெருமை உடன் பிறப்பாக அவனிடம் உண்டு. வேலனது முன்னிலையில் தான் மாட்டிக் கொண்டது அவனுக்குப் பெருத்த மானக்கேடாகப் போய் விட்டது.

தன்னால் அவர்களுக்கு இடை யில் நேர்ந்த மனத்தாங்கலை நினைத்து வேலன் திடுக்கிட்டு ஊமையாக நின்று கொண்டி ருந்தான.

“வேலா, நீ சேவலைப் பிடி. கிட்டுப் போ!” இது உத்தரவு போல் தொனித்தது. இனி பேசுவதற்கு ஒன்றுமே இல்லை வேலனுக்கு.

மேட்டிலிருந்து சுற்று வழியிறங்கிச் சேவலுடன் வந்து கொண்டிருந்தான் வேலன். நெஞ்சோடு அணைத்திருந்த சேவல், அவன் இதயத் துடிப்புபோல் அவ்வப்போது படபடத்தது.

சிலுசிலுத்த இளம் பனியோடு கிடந்த ஆற்றிலே கால் வைத்து இறங்கினான், வேலன். அக்கரை தாண்டி நாலெட்டு நடந்தால் வீட்டுக்குப் போய்விடலாம்.

“டேய் வேலா!”

திரும்பினான். சின்ன மாப்பிள்ளைதான் பின்னாலே வந்து கொண்டிருந்தார், விட்டபாடில்லை.

“ஏனுங்க?”

“மாமா அவுங்க சொன்னதே போதுமிண்ணு சேவலைத் தூக்கிக்கிட்டு வந்துட்டியா?”

“அவுங்கதானுங்க எடுத்துக் கிட்டுப் போகச் சொன்னாங்க. மாட்டேன்னா அப்புறம் அவுங்க மொகத்திலேயே முழிக்க முடியாதுங்களே.”

“இதெ வெச்சிக்கிட்டு என்ன பண்ணப் போறே?”


“என்னவோ பிரியத்துக்குத் தானுங்க” குரல் கம்மிப் போய்க் கிடந்தது.

மாப்பிள்ளை தன் இடுப்பில் அணிந்திருந்த பச்சை நிறமுள்ள ‘பெல்ட்’டின் பையிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தன் வலக்கையில் வைத்துக் கொண்டே கூறினான். “இந்தா, இன்னிக்கு நீ நரி முகத்துலே தான் முழிச்சிட்டு வந்திருக்கிறே, இதை வெச்சிகிட்டு சேவலைக் குடுத்திடு?”.

சில விநாடிகள் மௌனமாகவே நின்றான், மனத்தவிட்டை ஒருவாறு அடக்கிக் கொண்டு, “கோவிச்சுக்கப் படாதுங்க, முந்தித் தெரிஞ்சிருந்தா, நான் சத்தியமா கேட்டிருக்கவே மாட்டேனுங்க. என்னமோ எப்படியோ நடந்து போச்சு. இனி நான் இதை உங்களுக்குக் கொடுத்திட்டாலும் விபரீதமாகப் போகுமுங்க. ஐயா அவுங்களைச் சமாளிக்க முடியாதுங்க”. அழாக் குறையாக அவன் பதில் கூறினான்.

சேவலைத் தன் மார்போடு இறுகப் பிடித்துக் கொண்டான். மாப்பிள்ளை முகம் கோபத்தால் சிவந்தது. “குடுப்பியா, மாட்டியா?”

மறுக்கும் பாவனையில் தலையை அசைத்தான் வேலன், சினத்தால் தன் கையிலிருந்த நூறு ரூபாய் நோட்டை உள்ளங்கையால் கசக்கிக் கொண்டு, “டேய் ஒத்தைக் கண்ணா! உனக்கு இத்தனை ராங்கியாடா? பாத்துக்கறேன் டே!” என்று கறுவி விட்டுத் திரும்பி விடுவிடுவென்று போய்விட்டான் மாப்பிள்ளை.



‘ஒத்தைக் கண்ணன்’ என்று மாப்பிள்ளை தன்னை ஏசிவிட்டுப் போனது குறித்து வேலனுக்குத் தாங்கல் ஒன்றுமில்லை. அவன் ஒத்தைக் கண்ணன் தான். முதுகுக்குப் பின்னால் சிலர் தன்னை இப்படிப் பரிகசிப்பதும் அவனுக்குத் தெரியாததல்ல. சின்னக் குழந்தையாக அவனிருந்தபோது அவனுடல் முழுதும் ‘ஆத்தாள்’ வந்து ‘ஆடு ஆடு’ன்னு ஆடிவிட்டாள். பாயில் படுக்க வைத்தால் உறுத்தும் என்று வாழை இலையில் விளக்கெண்ணெய் தடவி, அதிலே போட்டு வைத்திருந்தார்களாம் அவனை. போகிற போக்கில் தனக்கு இருக்கும் ஆயிரம் கண்ணும் போதாதென்று அந்தப் பேராசைக்காரி அவனுடைய இரு கண்களில் ஒன்றையும் பறித்துக் கொண்டு போய் விட்டாள்! போனால் போகட்டும். ஒரு கண் போதாதா இந்த உலகத்தைப் பார்க்க? உயிரையாவது விட்டு வைத்தாளே, மகராசி!

பரக்கப் பரக்க ஆற்றைத் தாண்டி அக்கரை சேர்ந்து தன் காட்டை நோக்கி ஓடினான் அவன். அந்த நாலு ஏக்கராக் காட்டின் நடுவிலிருந்த வில்லை ஓட்டு வீட்டுக்குள் நுழைந்த பிறகுதான், அவனுக்கு உயிர் வந்தது. அந்தக் காடும் வீடும் அவன் சொந்தம். சின்ன வயசிலே பினாங்குக்குத் தொழில் தேடி ஓடி இருபது வருட காலம் உழைத்து, நாலு காசுடன் திரும்பி வந்து இந்தத் தோட்டத்தை வாங்கினான் வேலனுடைய தகப்பன் பினாங்கு முத்து. பிறந்த மூன்று குழந்தைகளில் எஞ்சி நின்றவன் வேலன்தான். செல்லப் பிள்ளையாக வளர்த்து, மகனது ஏழாம் வயதிலேயே பினாங்கு முத்து கள்ளுக்கடையில் ஒரு நாள் திடீரெனக் கண்ணை மூடி விட்டான்.

சோறு தரும் தெய்வமாகக் காடு இருந்தாலும், வேலனுக்கு இருபத்தைந்தாவது வயதில் மிகுந்த சிரமத்தின் பேரில் கல்யாணம் நடந்தது. அநாதையான தூரத்து உறவுப் பெண் வெள்ளையம்மாள், அவனுக்கு மனைவியாகக் கழுத்தை நீட்டினாள். தன் கணவன் ஒரு கண் இழந்தவனாக இருந்ததற்கு அவள் மனம் குமைந்ததாகவே தெரியவில்லை. கணவனும் மனைவியும், தாயுமாக அந்தக் குடும்பம் கசப்பின்றி வளர்ந்தது. அவர்களுக்கு வளர்ந்து வந்துள்ள பெருங்குறை பதின்மூன்று வருடங்களாகியும் குலம் விளங்க ஒரு குழந்தை கூட இல்லையே என்ற ஏக்கம்தான். இத்தனைக் காலமாகியும் தன் வயிறு வெறுமையோடிக் கிடக்கிறதே என்று வெள்ளையம்மாள் வேண்டாத தெய்வமில்லை, சுற்றாத அரச மரம் இல்லை. இதை வாய்விட்டுச் சொல்லாமல் மனத்தில் நினைத்துப் புழுங்கியவன் வேலன். வெள்ள கோயிலுக்கும், வாழைத் தோட்டத்து ஐயன் கோயிலுக்கும் மாமியாரும் மருமகளுமாக ஜோடி சேர்ந்து கொண்டு நடந்தார்கள். இப்போது

எந்தத் தெய்வம் கண் திறந்ததோ என்னவோ, வெள்ளையம்மாள் இரண்டு மாதம் மசக்கை!


சமீப காலமாகச் சேவல் கட்டுக் குப் போவது, சேவல் வளர்ப்பது அவனுடைய ஒரே பொழுது போக்கு, மனைவி வெள்ளை யம்மாள் முகத்தில் புதுமணப் பெண்ணின் பொலிவு. தாய்க்கு நிலை கொள்ளாத மகிழ்ச்சி! தவ மாய்த் தவமிருந்து பெறப்போகும் குழந்தையைக் கண்ணாரக் கண்டுவிட வேண்டுமென்ற இன்பத் தவிப்பு வேலனின் மனத்திலே அறுபது நாழிகையும் அடங்குவதே இல்லை. குழந்தை கருவில் இருக்கும் காலம் பத்து மாதம் என்றில்லாமல் நாலு மாதமாக இருந்தால் தேவலை என்று பறந்தது தந்தை மனம்.

பொங்கல் முடிந்து நாலைந்து நாள் இருக்கும். கடந்த ஏழெட்டு மாதமும் பொழுது போகாமல் இருந்த வேலனுக்கு, ஏதோ சிரிச்சுச் சிரிச்சு வெள்ளையம்மாளிடம் பேசுவது, பண்ணை வேலைகளை யும் தொழிலையும் கவனிப்பது, மீதியிருந்த நேரமெல்லாம் தன் சேவலைப் பராமரிப்பது இப்படிக் காலம் கழிந்தது. தாதறா விதையும், கருமணலுங் கலந்து சேவலுக்கு ஊட்டம் கொடுப்பான். தானியம் போடுவான். இப்படித் தாது புஷ்டி அடைந்த சேவல், பார்ப்பதற்கே கம்பீரமாகக் 'கொழு கொழு' வென்று மதமேறி நின்றது.

அன்று காலையில் சற்று நேரம், வெள்ளையம்மாளுக்கு இடுப்பு வலி கண்டது. பிறகு சரியாகி விட்ட தாகத் தோன்றிற்று. வழக்கம்போல் வீட்டு வேலைகளை மெதுவாகக் கவனிக்கத் தொடங்கி விட்டாள். "உம் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை. பேசாமே வூட்டோட இரு. அவசரம் ஆத்திரத்தும்போது உன்னை யார் தேடறது? என்று அறிவிப்புக் கொடுத்திருந்தாள் அவன் தாய். அவளே ஒரு மருத்துவச்சிதான். இருந்தாலும்...

தை மாதம் தான் அந்த வட்டாரத்தில் பெரிய சேவல் கட்டு. வெகு காலமாக நடக்கிறது. சேவல் கட்டு நடத்தக் கூடாது என்று சட்டம் உண்டு. அதாவது, அப்படி எழுத் தில் உண்டு. கள்ளிப் பாளையத்தில் நடக்கும் 'பெரிய கட்டு' பெயர் போனது. ஆனானப்பட்ட பெரிய நிபுணர்களும், சாதிச் சேவல்களும், கடையான கடைகளும் வந்து திருவிழாப் போல அந்த கிராமம் காட்சி தரும். அந்தக் கட்டிற்குப் போய்க் கலந்து கொண்டால் சிங்கன் - அதுதான் வேலன் தன் சேவலுக்கு வைத்துள்ள பெயர், தன் புகழை 'ஊரே கேளு நாடே கேளு' என்று பரவச் செய்து விடுமென்ற நம்பிக்கை, ஆசையெல்லாம் அவன் மனத்தில் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தது.

பிற்பகல் மூன்று மணியிருக்கும். கோடை வெயிலுக்கு என்ன அவசரமோ; தை மாதமே வந்து கொளுத்தத் தொடங்கி விட்டது



போல் வேக்காடு, நிறை சூலியான வெள்ளையம்மாள் பாயில் படுத்துக் கொண்டிருந்தாள், தூக்கம் பிடிக் காமல், மெதுவாக அவளருகே வந்து நின்ற வேலன் "அம்மா எங்கே!" என்று கேட்டான்.

"உள்ளே தூங்குது."

"உனக்கு ஒடம்புக்கு எப்பிடி யிருக்குது. வெள்ளை?" குரலில் பரிவு கலந்து வந்தது.

"நல்லாத்தானிருக்குது. மாமனுக்கு இன்னிக்கு என்ன இத்தனை கரிசனம்?'' அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தபடியே எதிர்க் கேள்வி கேட்டாள் வெள்ளை.

"சொல்லுன்னா?"

"நெசமாத்தான். நல்லாத்தானி ருக்குது. காலமேதான் எப்படியோ இருந்தது. எதுக்குக் கேக்கற மாமா?"

"கள்ளிப் பாளையம் போலாணு தான். பொங்கல் கட்டுக்கு."

"போறது."

"உனக்கு நல்லாருக்குதுண்ணாப் போலான்னுப் பாக்கறேன்".

இத்தனை வருடம் பழகிய கணவன் மனம் அவளுக்குத் தெரியாமலா போகும்? வேண்டாம் என்றாலும் இன்று பிடித்துள்ள வைத்தியத்தில் சொல்லாமல் போய் விடுவான் என்பது அவளுக்குத் தெரியும்."

"இல்லேன்னா நீ போகமாட்டி யாக்கும்?"

''மாட்டேன்.'' இப்படிச் சொல்லிட்டு அவள் முகத்தைப் பார்த்ததும் அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டது. இன்னிக்கு ஒரே ஒரு நாள்தான் வெள்ளை, அப்புறம்...

"அப்புறம்?"

"பையன் பொறந்து கண்ணாலே பார்த்த பிறகுதான் வெளியே காலெடுத்து வைப்பேன். நெசம்மா" என்றான் வேலன்.

"போறதுன்னா அத்தை எந்திரிக்கறதுக்குள்ளே போயிடு. எந்திரிச்சிட்டா சத்தம் போடுவாங்க, நேரத்தோட வந்திடு மாமா. சுத்தப் போயிடாதே!"

அடுத்த நிமிடமே சேவலும் கையுமாக வேலன் கள்ளிப் பாளையம் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

முத்தூர் ஜமீனின் பூச்சக்கரக் குடை நிழலில், கள்ளிப் பாளையம் முன்பு இருந்தது. ஜமீன்தாருக்கு மாமியார் ஊர் அது. பத்து, நாற்பது வருடங்களுக்கு முன் தை மாதத்தில் அப்போதிருந்த ஜமீன்தார், மற் போர் சிலம்பு விளையாட்டு, கத்தி வீச்சு, கரகாட்டம், ஒயில் கும்மி இப்படித் திருவிழா நடத்தினாராம். இப்போது வேலை போன ஜமீன்தார் சேவல் கட்டு நடத்து கிறார்.


வேடிக்கையான ஒரு சம்பவத்தோடு அன்று சேவல் கட்டு ஆரம்பமாயிற்று. பரம்பரை வழக்கப்படி ஜமீன்தார்தான் தன் சேவல் ஒன்றைத் தன் கையால் 'களம்புக' விடுவது வழக்கம். இன்றும் அப்படித்தான் சேவலைக் களத்தில் நிறுத்தினார். அடுத்து, முறைப்படி வேறு ஒருவரது சேவல் அதன் எதிரியாக நிறுத்தப்பட்டது. இப்படித்தான் கட்டுக்குப் 'பூசை' போடுவது வழக்கம். சேவல் கட்டு நடக்கும் பரந்த மைதானத்தில் ஏகப்பட்ட கூட்டம். அதன் ஓரத்தில் ஜமீன் பங்களா ஒன்றின் மதில் சுவர் உண்டு. ஜமீன் சேவல் களம் புகுந்தது. காலில் கட்டிய கத்தியுடன், அதே சமயம் பெட்டைக் கோழி ஒன்று தற்செயலாக எப்படியோ அங்குள்ள சுற்று மதிலின் மீது பறந்து நின்று ஏதோ சுயம்வரத்துக்கு நிற்கின்ற ராஜகுமாரி போல உற்றுப் பார்த்தது. அது ஜமீனது அந்தப்புரத்துக் கோழிதான். அதை எப்படியோ கண்டுவிட்ட, களம் புகுந்த ஜமீன் சேவல் 'ஜிவ்' என்று மேலே பறந்து, களம் மறந்து, காலில் கட்டிய கத்தியோடு அந்தப் பெட்டைக் கோழிக்குப் பக்கமாகப் போய் மதில் மேல் நின்றது. இரண்டும் சில விநாடிகள் தம்பதிகளாகக் கூட்டத்தினருக்குக் காட்சியளித்ததும், உடனே ஜோடியாகப் பறந்து பங்களாவின் அந்தப்புரம் சென்றுவிட்டன.

கூட்டத்தினர் இதைக் கண்டு 'ஓகோ' என்று கைதட்டிச் சிரித்து ஆரவாரம் செய்து விட்டார்கள். ஜமீன்தாருக்கு முகம் சுண்டிப் போனாலும் அவரும்கூடச் சேர்ந்து சிரித்துவிட்டார்.

சற்று நேரத்தில் சூடு பிடித்துக் கொண்டது. இரு கட்சிக்காரர்களின் ஆரவாரம் நெஞ்சு கிழிந்து சுருளும் சேவல்களும், இரத்தம் வழிய ஓடுவனவும், படபடக்கும் சிறகோடு சாகும்வரை போராடும் சேவல்களும் தோற்ற சேவல் கோச்சையைத் தோளில் போட்டுக் குதிக்கும் ஆரவாரமும் இப்படி ஒரே கொண்டாட்டமாக நடந்தது. அந்தப் பிராணிகளின் கொலை, சாவு, மரணாவஸ்தை இவற்றைப் பார்த்து மனிதர்கள் குதூகலமாகச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

பொங்கலுக்கு மருதாக் கவுண்டர் தந்த சோமன் வேட்டி உடுத்து, அரைக்கைச் சட்டையணிந்து, புதுமாப்பிள்ளை போல உற்சாகமாக வந்து இருந்தான் வேலன். உடலிலே கருப்பு நிறம் நிழலோடினாலும் வலிமை நிறைந்த உடற்கட்டினால் கருமையும் மாறிப் பொலிந்தது. அந்த ஒரு கண் மட்டும் ஊனப்படாமல் இருந்திருந்தால் நிச்சயமாக இப்போதும் மாப்பிள்ளைதான். அவனைச் சுற்றி நாலு சகபாடிகளும் வந்திருந்தார்கள்.

தன் 'சிங்கனை'க் கீழே இறக்கி விட்டுக் காலிலே கூர் முனைக் கத்தி கட்டிப் போருக்குத் தயாராக்



கினான், வேலன். கோயமுத்தூர் மாரியப்பன் பேரெடுத்த கட்டுக்காரன், அவன் சேவல் பிடரியைச் சிலிர்த்து நின்றது, கோயமுத்தூர் அலட்சியமாக வேலனைப் பார்த்துச் சொன்னான்.

"இது மரகதப் புள்ளி அப்பனே!"

"தெரிஞ்சுது."

"இருபத்து அஞ்சு ரூபா பந்தயம்?"

"செரி."

இனக் கொலைக்கென்றே வளர்க்கப்பட்டிருந்த தினவு எடுத்த 'சிங்கன்', இறக்கையைப் 'படபட' வென அடித்துப் போருக்குத் தயாராயிற்று. 'கொக், கொக்' என ஒரு வகையான எக்காள ஒலி முழக்கம் நடந்தது. 'ஜிவ் ஜிவ்' என்று இரு சேவல்களும் ஒன்றின் மேல் ஒன்று பாய்ந்தன. உடலோடு உடல் மோதும் ஒலி 'நெக்கு நெக்கு' என்று அவ்வப்போது கேட்டது. இரண்டு நிமிடங்கள் இடைவெளியின்றி மோதல். 'கொக்... கொக்!' கடைசியாக ஒரு மோதல். 'மரகதப் புள்ளி சுருண்டு கீழே விழுந்தது. நெஞ்சிலிருந்து பொங்கி வழிந்த ரத்தம் நிலத்தை நனைத்தது. சட்டென்று வேலன் சிங்கனைப் பிடித்துக் கொண்டான். கோயமுத்தூர் மாரி சுளையாக ரூபாயை எண்ணிக் கொடுத்து, குற்றுயிராகத் துடித்துக் கொண்டிருந்த தன் அருமையான மரகதப் புள்ளியை ஏக்கமுடன் பார்த்துவிட்டு நகர்ந்தான். அந்தப் பறவைப் பிராணிகளின் பகையிலும் சாவிலும், என்னத்தைக் கண்டதோ என்னவோ, ஆறறிவு படைத்த உயர்ந்த மனிதப் பிராணிகள் கைகொட்டி ஆரவாரித்து வேலனைப் பராட்டின. சாகக் கிடந்த மரகதப் புள்ளியை வேலனது சகா ஒருவன் தூக்கி வைத்துக் கொண்டான்.

அடுத்த கால் மணி நேரத்தில் மறுபடி இரண்டு சேவல்கள் சிங்கனது ஆற்றலுக்கு ஆற்றாமல் சரணடைந்தன. எழுபது ரூபாய் பந்தயப் பணமாகவும், மூன்று சேவல் கோச்சைகளும் வேலனுக்கு லாபமாயிற்று. வேலனது மனத்தில் மகிழ்ச்சி பொங்கி வளர்ந்தது. அவனது சேவலுக்கு எதிரியாக அங்கு வந்த கட்டுக்காரர்கள் இனி எவருமே தயாரில்லை என்பது சற்று நேரத்தில் தெளிவாகிவிட்டது. வேலன் நினைத்தது போலவே சிங்கன் ஜெயக்கொடி நாட்டிவிட்டான்.

தை மாதத்து மாலை வெயில் பனிக் குளிருடன் இதமாக வீசிற்று. சிங்கன் மூன்று வீரர்களைச் சவ நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது. என்றாலும், அதனுடலிலும் பகைவன் கொடுத்த காயங்களில் இரத்தம் கசிந்தது. வேலன் அது கண்டு மனம் கசிந்தான். பெருமையினாலும், கருணையினாலும் அவன் கண்களில் கண்ணீர் கலங்கி நின்றது. கையுடன் கொண்டு வந்

திருந்த ஏதோ தைலத்தை எடுத்துச் சிங்கனுடலில் தடவிச் சாந்தப் படுத்தினான். "போதும், இனி நேரமே வீடு திரும்பலாம்." சிங்கனை எடுத்துத் தன் மார்புடன் அழுத் தாமல் அப்படியே அணைத்தபடி புறப்பட்டான்.

"டேய் வேலா!"

எரிச்சலுடன் கிளம்பிய குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் வேலன். கவுண்டரது சின்ன மாப்பிள்ளை, தன் நெஞ்சோடு சேர்த்துப் பிடித்திருந்த சேவலுடன் வந்து கொண்டிருந்தான்.

"ஏண்டா போறே?

"நேரமாச்சுங்க,போறேன்."

"எத்தனைக் கோச்சை கிடைச்சுது?"

"சும்மா மூணுதானுங்க".

"நோஞ்சான் சேவல்களை அடிச்சிட்டுச் சிங்க மாட்டமா பொறப்பட்டிட்டியாக்கும்?

வேலன் பதில் பேசவில்லை. மாப்பிள்ளையின் முகத்தை மட்டும் ஒரு கணம் ஏறிட்டு ஒரு கண்ணால் கவனித்தான்.

பார்வையைத் தன் மார்பி லிருந்த சேவல் மீது திருப்பி மாப்பிள்ளை கேட்டான். "வேலா, இந்தச் சேவலைப் பாத்தியாடா, இது என்ன சாதிடா?"

"பச்சைக்கால் செங்கேரிங்க." வேலன் அச்சேவலின் இனங்கண்டு கொண்ட ஆற்றலோடு சற்று அநாயாசமாகவே பதில் சொல்லி விட்டான்.

"சேவலை இறக்கிக் கட்டுக்கு நிறுத்து பார்க்கலாம்..."


"வேண்டாங்க."

"ஏன் வேண்டாங்கறே?"

"நேரமாச்சுங்க."

இதற்குள் சுற்றிக் கூட்டம் சேர்ந்து கொண்டது. இது போர்க் களம் அல்லவா? தன் வீரனை அவமானத்துக்கு உள்ளாக்க வேலன் மனம் இசையவில்லை. திரும்பி சிங்கனை ஆயுத பாணி யாக்கித் தயாராக்கினான். மீண்டும் ஒரு படு கொலைக்குச் சேவல்கள் பிடரி சிலிர்த்து நின்றன.

மாப்பிள்ளையின் பச்சைக்கால் செங்கேரி 'மத மத' வெனத் திமிரி முகத்தை 'உப்'பென்று வைத்து நிமிர்ந்து நின்றது. கொலை வெறி மிகுந்த வன்மத்துடன் சிங்கனை உற்றுப் பார்த்தது. அதன் சிறகுகள் 'பள பள' வென மாலை வெயிலில் மின்னின. கருஞ் சிவப்பான அதன் நிறம் உலைக்களத்தில் காய்ச்சிய 'கொழு'வைப் போலத் தோன்றியது. சிங்கன் வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறத்தோடும் எதிரிகளால் ஏற்கெனவே பட்ட விழுப்புண் களில் வழிந்த ரத்தக் கசிவோடும் நின்று எதிரியை நோக்கியது. ஏதோ



காரணத்தால் சற்று நேரம் தாமதித்து வந்ததால், மாப்பிள்ளைச் சேவலுக்கு இதுதான் முதல் போர்.

"எத்தனை ரூபாய் பந்தயம்?" மாப்பிள்ளை கேட்டான்.

"சொல்லுங்க?"

"அம்பது!"

"செரீங்க." வேலன் ஐம்பது ரூபாயை நோட்டாக எடுத்து முன் வைத்தான். நின்ற இடத்திலிருந்து ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்களை இடக்கையால் ஆணவத்தோடு வீசியெறிந்தான் மாப்பிள்ளை. பக்கத்திலிருந்த யாரோ ஒரு புது மனிதன் பந்தயத் தொகையை எடுத்துப் பத்திரப்படுத்தினான்.

"ஜிவ்!"

"ஜிவ்!"

"கொக், கொக்!" சேவல்கள் தங்கள் எஜமானர்களது பந்தயத் தொகையைக் காப்பாற்றிக் கொடுக்கத் தமது உயிரைச் சாவுக்கு இரையாக்கத் தொடங்கின.

"அடீடா, ராஜா"

"அப்படியடி சிங்கா!"

"அடி சக்கை! சுருளுதடா சிங்கன்!"

"போடு... போடு... அப்படிப் போடு சிங்கா!

எந்தச் சேவலின் சிறகிடையே சாவு மறைந்து கொண்டு இருக்கிறது என்று யாராலும் நிர்ணயிக்க முடியவில்லை. சிங்கனுடலிலிருந்து ரத்தம் பீறிட்டு வழிந்தது. 'பச்சைக் காலும்' ரத்தம் வழியும் நெஞ்சை நிமிர்த்தி மோதிற்று.. ஒரே மூச்சாக அவை சாடிச் சில நிமிடங்கள் கழித்து இரண்டும் பின்வாங்கி நகர்ந்தன!

அவற்றின் எஜமானர்கள் தத்தம் வீரர்களைப் பிடித்துத் தடவிக் கொடுத்துக் களைப்பாற்றினார்கள். மாப்பிள்ளை தன் சேவலைத் தடவிக் கொடுத்தபடியே இளக்கார மாகப் பார்த்து "டேய் வேலா! ரூபா அம்பது பளுத்துப் போச்சு. பாத்துக்கோ" என்றான்.

"பாக்கலாங்க" என்றான் பிடி தராமல் வேலன்.

"போடா சிங்கா, போ!"

"ஒரே சாடு சாடுடா, ராஜா போ!"

சிறகுகளை அகல விரித்து இரு சேவல்களும் வெகுண்டு மோதின. 'சட் சட்' என அடியும் மோதலும் விழுந்தன. மூச்சு விடாமல் ஓர் இறுதிப் போரிலே அவை இறங்கின. 'மரணம் அல்லது வெற்றி' இரண்டில் ஒன்றை முடிவு செய்து கொண்டே தீருவதென இரண்டும் சங்கல்பம் பூண்டனபோல் தோன்றின. கழுத்துக்கள் புடைத்து, சிறகு விரித்து, பிடரி சிலிர்த்து, பயங்கரமான கொலைகாரர்களைப்

போலத் தோற்றமளித்தன.

"சிங்கன் சுருளராண்டா..."

"ராசா மயங்குது டோய்! தாங்காது".

சிங்கன் உடலிலே ரத்தம் மறுபடியும் வழிந்தது. ராசாவுக்கு வயிற்றின் வலப்புறத்தில் ரத்தம் பீறிட்டது. எது வெல்லும்? சிங்கன் ஒரு கணம் தள்ளாடினான். "போச்சு, தீர்ந்தான் சிங்கன்" என்று எண்ணினான் வேலன். அடுத்த கணம் திடீரென்று எழுந்து மூச்சு விடாமல் மோதிற்று சிங்கன்.

ஆறாவது மோதலிலே எதிரடியாக மறுபடியும் ராசாவும் அப்படியே சாடிற்று. சிங்கனும் சற்றே சுருண்டு தயங்கித் தளர்ந்தது. ஏற்கெனவே மூவருடன் சமராடிப் பட்ட ரணக்காயங்களுடன் சரி நிகர் சமாதானப் பகைவனால் விளைந்த தாக்குதலும், நறுக்கென்று பல இடங்களில் பாய்ந்த கத்திக் காயங்களும், அதன் மரண வேதனையைக் குறிப்புக் காட்டின. கடைசியாகச் சிங்கன் நிமிர்ந்தது. ஒரே கணம் "படார், படார்." மூச்சு விடாமல் மறுபடி சிங்கனது முடிவற்ற ஆங்காரச் சமர் கண்டு கூட்டம் அசந்து திகைத்து நின்றது.

அந்த எதிரடி முடியுமுன்னே மாப்பிள்ளைச் சேவல் நிலத்திலே ரத்தக் கோலம் போட்டுக் கொண்டே ஓடத் தொடங்கிற்று. கழுத்துப் புடைத்து எரித்து விடுவதுபோல் விழித்த சிங்கன் ராசாவைத் துரத்திக் கொண்டே ஓடிற்று. அந்தப் பாய்ச்சலை கண்டு கூட்டமே சற்று ஒதுங்கி நின்றது.

ராசாவின் தோல்வி நிச்சயமான போது, சுற்றி நின்ற பார்வையாளர்கள் கைதட்டி ஆர்ப்பாட்டம் செய்து விட்டார்கள்.


வேலனுக்குப் பெருமையால் இருப்புக் கொள்ளவில்லை. ராசாவைத் துரத்திச் செல்லும் சிங்கனுக்குப் பின்னால் ஓடி அதைத் தன் கைகளால் எடுக்கக் குனிந்தான்.

சண்டாளத்தனமான மூர்க்கமும் பயங்கரமும் நிறைந்த ஆவேசத்தால் கொதித்துக் கொண்டிருந்த சிங்கன், தன் பின்னால் தன்னைப் பிடிக்க யாரோ வருவது கண்டு திரும்பி வேலன் மீதே காலில் கட்டிய கத்தியுடன் எகிறிப் பாய்ந்தது. அது பாயவும் வேலன் அதைப் பிடிக்கக் குனியவும் சரியாக இருந்தது.

"ஐயோ!" என்று வேலன் அலறினான். அவன் அலறிய போது யாரோ கட கட எனச் சிரித்த பரிகாச ஒலி வேலனது செவியில் விழுந்தது. அது மாப்பிள்ளைதான் என்பது மட்டும் அவன் மனத்திற்குத் தெரியும். அதன்பின் என்ன நடந்தது என்பதே அவனுக்கு நினைவில்லை.

வேலனுக்கு மறுபடி சுய நினைவு வரத் தொடங்கியதும் அவன் மனம் விழிப்படைந்து நடந்தவற்றை எல்லாம் கணப் பொழுதில் வரிசைப்படி அவனுக்கு உரைத்தது. அக்கம் பக்கம் யாரோ பேசியது கேட்டது.

யார் என்பது மட்டும் தெரியவில்லை. உலகம் முழுவதும் இருட்டிக் கிடப்பது போல் அவனுக்குத் தோன்றிற்று. முகத்தில் யாரோ கட்டுப் போட்டிருந்தார்கள்.



தாள முடியாமல் முகத்தைச் சுற்றி மரண வலி வலித்தது. எழ முயன்றபடி 'யாரு பக்கத்திலே?' என்று கேட்டான். கைகளால் தடவிப்பார்த்ததும் அதுதான் வழக்கமாய் படுக்கும் கயிற்றுக் கட்டில் என்பதும் அவனுக்கு ஸ்பரிச உணர்வே சொல்லியது.

"பேசாமே படுத்துக்கோ வேலா"

பெரிய கவுண்டர் குரல் இரக்கமுடன் அவன் காதில் விழுந்தது. திகைத்தான் வேலன்.

"பண்ணாடி அவுங்களா!" வியப்பு நிறைந்த குரலில் கேட்டான்.

"ஆமா, ஆடாமே அசையாமே படுத்திரு." இன்னும் யார் யாரோ அங்கிருப்பதாக மட்டும் அவனுக்குத் தெரிந்தது.

"இப்ப எங்கிருக்கிறேனுங்க... இது எல்லாம் என்னங்க" கையை நீட்டியே பாவனையுடன் கேட்டான்.

"உன் வீட்டிலேதான் இருக்கே. ஊசி போட்டிருக்குது. கொஞ்சம் நல்லானதும் காலமே கோயமுத்தூர் ஆஸ்பத்திரிக்குப் போலாம்."

ஒரு சில வினாடிகள் அவன் ஊமையாகி எதையோ நினைத்துத் தவித்தான். வலக்கையில் தோள் பட்டையிலே ஏதோ ஊசி குத்தியிருந்ததுபோல் வலி. உள்ளே வீட்டிலிருந்து குழந்தை ஒன்று வாய் மூடாது அழும் குரல் அவனுக்குக் கேட்டது.

"என்ன சத்தங்க அது!" ஒரு பதைபதைப்புடன் கேட்டான் வேலன்.

"உனக்குப் பையன் பொறந்திருக்கிறான். ராசா மாதிரி இருக்குது குழந்தை" என்று பக்கத்திலிருந்து அவனுக்குப் பழக்கமான யாரோ ஒரு பெண் குரல் பதில் கூறிற்று.

"அம்மா எங்கே?"

தான் மயங்கி வீழ்ந்த சமயம் அவ்வழியே தற்செயலாக வண்டியில் வந்த கவுண்டர்தான் தன்னை எடுத்து வந்தார் என்பதும், வேலனின் தாய் தன் அருமை மகனுக்கு நேர்ந்த விபரீதத்தால் நினைவிழந்து கிடக்கிறாள் என்பதும், வெற்றி மாலை சூடிய தன் சிங்கன் அங்கேயே கொஞ்ச நேரத்தில் செத்துப்போன சேதியும், வெள்ளையம்மாளும், தானும், தன் தாயும் தவங்கிடந்து பிறந்துள்ள தன் தலை மகனை அவனது ராஜா போன்ற அழகு முகத்தைக் கண்டு மகிழத் தனக்கு இருந்த அந்த ஒரே ஒரு கண்ணும் சிங்கனது கத்தியால் மீளாத குருடாகி விட்டது என்பதும் அப்போது அவனுக்குத் தெரிந்திருக்க முடியாது!

**-'தலைவாழை' என்ற மூத்த தலைமுறைக் கதைகள் தொகுப்பிலிருந்து. தொகுப்பாசிரியர் இ.எஸ். தேவசிகாமணி, வெளியீடு அன்னம் (பி) லிட்., 2 சிவன் கோயில் தெற்குத் தெரு, சிவகங்கை.**

## மனிதனின் உடம்பு

**மை**னஸ் 30 டிகிரி பாரன்ஹீட்டுக்கு குறைவான குளிரில் மனிதனின் உடம்பு விறைத்துவிடும். அதேபோல் 120 டிகிரி பாரன்ஹீட்டுக்கு அதிகமான வெப்பத்தை மனிதனின் உடம்பு தாங்காமல் கருகிவிடும்.

## சேற்றுப்புண்ணுக்கு மருந்து

**ம**ழைவெள்ளம் பெருக்கெடுத்து ஓடி தரையெங்கும் சேறும் சகதியுமாக இப்போது இருக்கும். அதில் நடந்தால் கால் விரல்களில் சேற்றுப்புண் உண்டாகும். அதற்காக நாம் வெளியில் போகாமல் முடங்கிக்கிடக்க முடியுமா? சேற்றுப்புண் இருந்தால், கொஞ்சம் மஞ்சளையும், அதேஅளவுக்கு வேப்பிலையையும் எடுத்துக் கொண்டு நன்றாக அரைத்து, அதன் விழுதை புண் உள்ள இடத்தில் தினமும் தடவுங்கள். புண் விரைவில் குணமாகிவிடும்.

## வெள்ளரிக்காயின் வீரியம்

**ப**ச்சையாகவே தின்னக்கூடிய காய்கறி களில் வெள்ளரிக்காய் சுவைமிக்கது. இது புகைபிடிப்பவர்களின் வயிற்றில் சுரக்கும் நஞ்சைப் போக்க பெரிதும் பயன்படுகிறது. வெள்ளரிப்பிஞ்சை சாப்பிடும்போது, அது செரிப்பதற்காக நம் இரைப்பை ஒருவித என்ஸைமைச் சுரக்கிறது. அந்த நீர், புகைப் பிடிப்பவர்களின் வயிற்றிலுள்ள நஞ்சைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

## முதல் பல்கலைக்கழகம்

**உ**லகிலேயே முதன்முதலில் தோன்றிய பல்கலைக்கழகம் ஏதென்சில் தொடங்கப்பட்டது. இதில் அரிஸ்டாடில் வால் தொடங்கப்பட்டது. இதில் அரிஸ்டாடில் படித்தார்.

15-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பாரீஸ் பல்கலைக்கழகத்தில் 50 கல்லூரிகளும், 20,000 மாணவர்களும் இருந்தார்கள். அதுதான் அப்போது உலகத்தின் மிகப்பெரிய பல்கலைக் கழகம்.

கல்கத்தா பல்கலைக்கழகம்தான் நம் நாட்டில் முதன்முதலாகத் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகம். இதுதான் நம் நாட்டிலேயே பழமையானதாகும்.

## நீலத் திமிங்கலம்

**பொ**துவாக விலங்குகளில் பாலூட்டி இனத்தைச் சேர்ந்தவைகள் குட்டிகளை ஈனும்போது, அந்தக் குட்டிகளின் தலைப் பகுதிதான் முதலில் வெளிவரும். ஆனால் திமிங்கலம், டால்பின் முதலியவற்றின் குட்டிகள் பிறக்கும்போது, அதன் வால் பகுதிகள்தான் முதலில் வெளிவரும். பிறந்தவுடன் தாய் அதை நீர்மட்டத்திற்கு மேல் தள்ளிக்கொண்டு வந்து சுவாசிக்க உதவுகிறது.

திமிங்கலத்தில் நீலத்திமிங்கலம் என்றொரு வகையுண்டு. ஏழரை மீட்டர் நீளமும் இரண்டு டன் எடையும் இருக்குமாம். ஒவ்வொரு நாளும் அதன் தாயிடமிருந்து 600 லிட்டர் பால் குடிக்கும். ஒரே வாரத்தில் அதன் எடை இரண்டு மடங்காகிவிடுமாம்.

# அறிவியல் துளிகள்

## உள்ளத்தை அள்ளித்தா

பெண்ணின் இதயம் ஆணின் இதயத்தை விட பதினைந்து சதவீதம் அளவில் சிறியது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதனால், எந்தப் பெண்ணாவது ஆணிடம் உன் இதயத்தை அள்ளித்தா என்றால் கொடுத்துவிடாதீர்கள். அங்கே இடமிருக்காது. ஏனென்றால் ஆணின் இதயம் பெரியதாயிற்றே!

## டயருக்கு காற்றடிக்கப் புதிய கருவி

இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு நிறுவனம் வாகன டயர்களுக்குக் காற்றடிப்பதற்கான நவீன இயந்திரம் ஒன்றைத் தயாரித்து உள்ளது. இந்த இயந்திரம் பல்வேறு வசதிகளைக் கொண்டது. பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள், வாகனப் பழுது நீக்கும் இடங்களில் வைத்துக் கொள்வதற்கு ஏற்ப இந்தக் கருவியை இந்நிறுவனம் தயாரித்து உள்ளது. இக்கருவி காற்றை நிரப்பியவுடன், டயரில் அதிகக்காற்று இருந்தால், தானாகவே அதைக் குறைக்கவும் செய்கிறது. இதற்கென தானியங்கிக் கருவியும் பொருத்தப்பட்டுள்ள தாக இந்நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். மேலும் பல நவீன வசதிகளையும் இக்கருவியில் ஏற்படுத்தி உள்ளனர்.

## டர்பன்டைன் தைலம்

டர்பன்டைன் தைலம் என்பது "சீமைத் தேவதாரு" மரத்திலிருந்து வடித்தெடுக்கப் படும் ஒரு திரவம் ஆகும். இந்தியாவில் இமயமலைப் பகுதிகளில் கடல்மட்டத்துக்கு மேல் 1500-1900 அடி உயரம் வரை உள்ள பகுதிகளில் இந்தச் "சீமைத் தேவதாரு" வளர்கின்றது. இப்பகுதிகளில் இம்மரங்கள் சுமார் 25 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிராகின்றன.

"சீமைத் தேவதாரு" மரத்தைச் சிறு ஊசியால் குத்திவிட்டால் அதில் பிசின் போன்ற திரவம் வடிகிறது. பின்பு அந்த திரவத்தை ஆவிமுறையில் தைலமாகத் தயாரிக்கின்றனர். இந்தியாவில் தயாரிக்கப் படும் டர்பன்டைன் நாற்றம் போக்கி களாகவும், பூச்சி கொல்லிகளாகவும், பெயிண்ட், வார்னீஷ் முதலியவைகள் தயாரிக்கப் பெரிதும் பயன்படுகின்றன. மேலும் டர்பன்டைன் தைலம் மருத்துவத் துறைக்கும் பெரிதும் பயன்படுகிறது.

## சீதாபழம் தான் அருமருந்தாச்சு!!

சீதாப்பழம் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒரு பழமாகும். இப்பழம் விலையும் மலிவுதான். எல்லா இடங்களிலும் எளிதில் கிடைக்கக்கூடியது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆண், பெண் என்ற வித்தியாசமின்றி விரும்பிச் சாப்பிடக் கூடியது. இப்பழம் நல்ல வைட்டமின் சத்துக்கள் நிறைந்தது. உடல் ஆரோக்கியத்தைத் தரவல்லது என்பது நாம் அனைவரும் அறிந்த விஷயம்தான். இதில் நாம் அறியாத விஷயம் என்னவென்றால் நாம் இந்த பழத்தைச் சாப்பிட்டுவிட்டு இதன் விதையை தூக்கி கீழே எறிந்து விடுகின்றோம். அவ்வாறு எறிந்துவிடாமல் இந்த விதையைச் சேகரித்து அப்படியே வெயிலில் காயவைத்து உரலில் போட்டு தூள் செய்து ஒரு பாட்டிலில் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். பின்பு இதில் சிறிது பொடி எடுத்து நீரில் குழைத்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் ஊறவைத்துப் பின்பு சீகக்காய் போட்டு குளித்து வந்தால் தலையில் உள்ள பேன்கள் அடியோடு ஒழிந்துவிடுவதோடு, தலையில் பொடுகும் வராது.

## கனநீர்

அணு உலைகளில் பயன்படுத்தப்படும் கனநீர் மிகவும் விலைமதிப்புள்ளதாகும். ஒரு லிட்டரின் விலை 4000 ரூபாய்க்கும் அதிகமாகும். கனநீர் சாதாரண நீரை விட 10 மடங்கு கனமானது. விஷத்தன்மையுள்ளது. இருவகை நீரிலும் ஹைட்ரஜன் மாறுபடுவது தான் இதற்குக் காரணம். ஹைட்ரஜன் அணுக்களைப் பிரித்து கனநீரைத் தயாரிக் கிறார்கள். இதற்கு நிறைய செலவாகும். அதனால்தான் கனநீரின் விலை அதிகம்.

# கவிதைச்சோலை

'இன்றுபோல் என்றும் இரும்' என்ற தலைப்பின் கீழ் நாம் வைத்த போட்டியில் ஏராளமான கவிதைகள் வந்து குவிந்தன; அவற்றுள் பரிசுக்குரிய கவிதைகள் இரண்டைச் சென்ற இதழில் கண்டீர்கள்; பாராட்டுக்குரிய சில கவிதைகளைத் தந்திருக்கிறோம் - சுவையுங்கள்.

## இன்றுபோல் என்றும் இரும்

தூங்கியதும் அதனாலே துயர்கள் யாவும்
தொடர்கதையாய்ச் சூழ்ந்ததுவும் இருண்டு நெஞ்சம்
ஏங்கியதும் ஏமாற்றம் முனைந்து தாக்கி
இழிந்ததுவும் அழிந்ததுவும் போதும்! வெல்லும்
ஓங்குதிறல் பெற்றுள்ளோம்! இனமும் நாடும்
உய்வுபெற மேன்மையுறத் தொண்டு செய்ய
நாங்களெலாம் சூளுரைத்து விட்டோம் என்றே
நாவரங்கில் தேன்வழிய நவின்றான் நண்பன்!

தக்காரை அரியணையில் அமர்த்தி வைத்தும்
தகவிலரை அடியோடு வீழச் செய்தும்
சிக்கலின்றி ஊராட்சி இயங்கச் செய்தும்
செயலாண்மை மிக்கவரை ஆளச் செய்தும்
மக்களாட்சிப் பயிர்செழிக்கச் செய்த அன்ப!
மணக்கட்டும் புகழ்வாழ்க்கை இனிமே லேனும்!
எக்காளம் இடுவோரைச் சாய்த்துத் தள்ளி
இன்றுபோல என்றும்இரும் என்றேன் நானும்!

-கடவூர் மணிமாறன்



அன்னைத் தமிழை அரியணையில் ஏற்றுதற்குத்
தன்னை அர்ப்பணித்த தாழ்விலாச் செல்வர்
தெளிவான சிந்தனையும் திட்டமிடும் பாங்கும்
எளியோரை முன்னேற்றும் எண்ணமும் கொண்டோர்
மொழியால் மதத்தால் முடங்காது என்றும்
விழியாய்த் தேசியம் பேணிடும் சான்றோர்
மனிதத்தை வாழ்விக்கும் மாண்புறு சேவையால்
புனிதத்தைச் செய்கின்ற பொன்மனச் செம்மல்கள்
பொன்மானைத் தேடுகின்ற பொய்மை விலக்கிவைத்து
என்மானம் தன்மானம் என்றுவாழும் நல்லோர்
பகுத்தறிவைப் பக்குவமாய்ப் பாமரரின் உள்ளம்
புகுத்திடவே பாடுபடும் புத்துலகச் சிற்பிகள்
கொண்டிருக்கும் கொள்கை குறையாமல் நீங்களெல்லாம்
தொண்டுசெய்யும் உள்ளத்துத் தூயோராய் எந்நாளும்
குன்றாத வாழ்நாள் குவலயத்தில் பெற்றுயர்ந்து
இன்றுபோல் என்றும் இரும்.

-வார்ப்பட்டு அ. கருப்பையா



கார்கண்டே களித்தாடும் மயிலைப் போலே
கதிர்கண்டே குதித்தாடும் மலரைப் போலே
சீர்கொண்டே சிறந்தோங்கு கவிதை போலே
சிறுமழலை கண்டுவக்கும் தாயைப் போலே
தார்தள்ளித் தழைத்தோங்கும் வாழை போலே
தலைசாய்த்துச் சதிராடும் கதிரைப் போலே
பார்மீது சிறந்தோங்கி பதவி பெற்ற
பண்பாட்டுப் பெட்டகமே! கலைஞ ரேறே!

வேலைதேடி அலைகின்ற படித்தோ ருக்கும்
வெறுப்பூட்டும் விலையுயர்வால் தவிப்போ ருக்கும்
ஆலைகளில் வேலைசெயும் தொழிலா ளர்க்கும்
அண்ணாந்து வான்பார்க்கும் உழவ ருக்கும்
சீலமிகு நன்னெறியில் திண்மை யோடு
சிறப்புறவே வாழ்கின்ற சான்றோ ருக்கும்
கோலமிகு வாழ்வுதந்தே ஆட்சி செய்து
கோமகனே! இன்றுபோல இரும்என் றென்றும்!

-அதலை இராமன்



தாய்க்குலமே

மூன்றிலொரு பங்கினராய் முன்வந்தீர், தாய்க்குலமே!
ஊன்றிடுவீர் நல்லாட்சி, "உள்ளாட்சி" சான்றாக
நின்றிடுவீர்; தொண்டால் நிலைத்திடுவீர்; மாறாமல்
இன்றுபோல் என்றும் இரும்.

ஆகுமே

தாயறியாச் 'சூல்' இல்லை; தக்கபணி இன்னதென்று
ஆய்ந்தறிதல் உங்களுக்கு ஆகுமே தேய்வின்றி
ஒன்றொன்றாய்ச் செய்திடுவீர்; ஊர்மக்கள் நெஞ்சத்தில்
இன்றுபோல் என்றும் இரும்.

அதி'காரம்'

அதிகார போதை அதி'கார' மானால்
பதவி பறிபோகும் பார்ப்பீர்; இதுபாடம்
நன்றறிவீர், பக்குவமாய், நாணயமாய்த் தொண்டாற்றி
இன்றுபோல் என்றும் இரும்.

மீண்டும்

ஆண்டுகள் ஐந்தும் அயராது பாடுபட்டால்
மீண்டும் வரவேற்போம் வெற்றிதந்து ஈண்டினிமேல்
நின்றுயர்வீர் ஆண்டவர்க்கு நேர்சமமாய்; சேவையிலே
இன்றுபோல் என்றும் இரும்.

-கோம்பைச் சீரான்

கற்பனையின் சிறகெடுத்துப் பறந்துபோனேன்!
கண்ணெதிரே கண்டதெலாம் ரசிக்க லானேன்!
அற்புதத்தின் உச்சகட்டம்! என்ன சொல்வேன்!
அண்ணாவே எதிர்வந்தார்; 'தம்பீ' என்றார்!
நற்றவமோ?! நான்பெற்ற பேறு தானோ?!
நற்றமிழின் சொல்லெடுத்தே பேச லானார்!
நெற்பயிரைக் காண்பித்தார்; பணிவைச் சொன்னார்!
நெடியமரம் தனைக்காட்டி நேர்மை சொன்னார்!

கரும்பொன்றைக் காண்பித்தார்; இனிமை சொன்னார்!
கற்பூரம் தனைக்காட்டித் தியாகம் சொன்னார்!
துரும்பாக இருந்தாலும் மதிக்கச் சொன்னார்!
தொண்டாற்றும் உள்ளத்தைத் துதிக்கச் சொன்னார்!
அருமைமிகு அண்ணாவை வணங்கி நானும்
'அறிவுரையைப் பின்பற்றி நடப்பேன்' என்றேன்!
"திருத்தமுற இன்றுபோல் இரும்; என்றென்றும்
தம்பி!" என நெஞ்சார வாழ்த்திச் சென்றார்!

—சி. பாலகிருஷ்ணன்

முத்தமிழின் வித்தகமே!
முக்கனியின் சொற்சுவையே!
எத்திசையும் வாழுகின்ற
எந்தமிழர் உள்ளமெலாம்
ஒத்திசைவாய் உம்வழியில்
ஒற்றுமையாய்ச் சேர்வதற்கு,
உத்தமரே! ஆண்டுநூறு
இன்றுபோல் என்றும்இரும்!

'பா'த்திறத்தில் தோய்ந்தறிவீர்
பத்திரங்கள் சேர்த்தறியீர்
பாத்திரத்தில் போட்டறிவீர்
பார்க்கவுமே கூசுவோர்க்கும்!
முத்தமிழர் பத்திரமாய்
மேன்மைபெற வேண்டுமெனில்,
உத்தமரே! ஆண்டுநூறு
இன்றுபோல என்றும்இரும்!

-ரதிராமன்

## சுயநிதிக் கல்லூரிகள் விரும்பத்தகாதது அல்ல

"கோவில்பட்டியில் ஒரு கல்லூரி தொடங்கப்படுவதற்கு ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே அரசாங்கத்தினிடத்திலேவலியுறுத்திக் கேட்டார்கள். அரசு அதற்கு ஒரு குறிப்பிட்ட நிதி தரவேண்டும். அரசுக்கு அல்ல;தனிப்பட்ட முறையில் அப்படியொரு பிரச்சினை ஏற்பட்டு அந்த நிதி தராமல் அந்தக் கல்லூரி தொடங்காமல் தற்போது முறையாக அனுமதி பெற்ற காரணத்தால் கோவில்பட்டியில் உள்ள மக்களே மகிழத்தக்க வகையில் அந்தக் கல்லூரி துவங்கப்பட்டுள்ளது.

ஆகவே சுயநிதிக் கல்லூரி என்பது அடியோடு விரும்பத்தகாததாக இல்லை. தேவைப்படுவதாக இருக்கிறது. அரசு ஏற்கெனவே தொடர்ந்து பல ஆண்டுகளாக நடத்தி வருபவை 65 கல்லூரிகள். உதவி பெறுகிற கல்லூரிகள் 160. அதே நேரத்தில் சுயநிதிக் கல்லூரிகள் அண்மைக் காலத்தில் தொடங்கி நடத்தப்படுவது 98. அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகள் 65 தான். மக்களின் ஆதரவால், ஒத்துழைப்பால் வளருகிற கல்லூரிகள் இன்றைக்கு மிகப் பெரிய அளவில் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

எல்லா மக்களுக்கும் தேவை என்கிற நிலையில் கல்லூரி என்பது உயர்ந்து நிற்கிறது. தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்க, குறிப்பிட்ட அளவு செலவழிக்கவும் பெற்றோர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படியாவது கல்வி பரவ வேண்டும் என்பது குறித்து நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும்."

- பேராசிரியர் க. அன்பழகன்

(மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொடங்கிவைத்த 'டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி அம்மாள் மகளிர் கல்லூரி' விழாவில் பேசியதிலிருந்து)

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது, மற்றவர்களை மகிழ வைப்பதில்தான் இருக்கிறது!

-மெஹர் பாபா

உயர்ந்த உள்ளங்களுக்கு இடையிலேதான் தூய்மையான தோழமை மலர முடியும்!

-தாகூர்

சென்ற இதழ் தொடர்ச்சி

வணிக நிறுவனங்களின் பெயர்ப்பலகை

# தமிழுக்கு முதல் மரியாதை

131. Cottage Industries .. குடிசைத் தொழிலகங்கள், குடிசைத் தொழில்கள்

132. Counter .. எண்ணகம், செயலறை, கல்லா, செலுத்துமிடம்

133. Courier .. தூதஞ்சல்

134. Covering .. புனைவு அணி, முலாமிட்ட, முலாம் பூசிய

135. Crackers .. பட்டாசுகள்

136. Crafts .. கைத்தொழில்கள்

137. Cushion .. மெத்தியம், மெத்தை

138. Cut Piece Centre .. விடுதுணியகம், வெட்டுத் துணியகம், துண்டுத் துணிக்கடை

139. Cycle Company .. மிதிவண்டிக் குழுமம், மிதிவண்டி வாடகைக் கடை

140. Cycle-Mart .. மிதிவண்டி அங்காடி, மிதிவண்டி விற்பனை நிலையம்

141. Cycle rickshaw-manufacturers .. மிதியிழுவை உருவாக்கம், நரவண்டி உருவாக்கம், மிதியிழுவை உற்பத்தியாளர்

142. Cylinder Press .. உருளையச்சகம்

143. Data Processing .. விவர வகைப்பாடு, தகவல் தொகுப்பகம்

144. Dealers .. விற்பகர், விற்குநர்

145. Decorators .. அணி செய்பவர், அழகுபடுத்துநர்

146. Deluxe Centre .. சொகுசு நிலையம்

147. Dental Clinic .. பல் மருத்துவமனை

148. Dentist .. பல் மருத்துவர்

149. Departmental Store .. பாகறைப் பண்டகம் - பல்பொருள் அங்காடி

150. Deposit .. இட்டுவைப்பு, சேமிப்பு, ஏமவைப்பு, வைப்பீடு

151. Depot .. கிடங்ககம், கிட்டங்கி, கிடங்கு, பணிமனை

152. Designers .. வடிவமைப்பாளர்

153. Detergent .. சலவைப் பொருள்

154. Die Castings .. அச்சு உரு வார்ப்புகள்

155. Digital Watch .. எண் கடிகை

156. Distilleries .. துணிவடி மனை, வடிசாலை

157. Drinks .. பருகுணா, குளிர்பானம், பானங்கள்

158. Dress Makers .. ஆடை ஆக்குநர், ஆடை தயாரிப்பாளர்

159. Dress Paradise .. ஆடை உலகம்

160. Druggists .. மருந்தாளர்

161. Drug Stores .. மருந்துப் பண்டகம், மருந்துக் கடை

162. Dry Cleaners .. உலர் வெளுப்பாளர், உலர் சலவையகம்

163. Duty Paid Shop .. தீர்வை செலுத்தப்பட்ட பொருள் விற்பனைக் கடை

164. Dye .. சாயம்

165. Dye-Stuff .. சாயப் பொருள்

166. Dye-Works .. சாயத் தொழில்

167. Dyeing .. சாயப்பூச்சு, சாயம் தோய்த்தல்

168. Edible Oil .. உன் எண்ணெய், சமையல் எண்ணெய்

169. Electricals .. மின்பொருளகம்

170. Electronics .. மின்துகளகம், மின்னகம், மின்னணுப் பொருளகம்

171. Embroidery .. பூத்தையல், தையல் வேலைப்பாடு

172. Emporium .. மளிகையகம், கலையகம், விற்பனைப் பெருநிலையம்

173. Emulsion .. பால்நிறக் குழம்பு

174. Enclave .. வளாகம்

175. Engineer .. பொறிஞர், பொறியாளர்

176. Engineering Industries .. பொறியியல் தொழில்கம்

177. Enlarger .. பெரிதாக்கும் கருவி, விரிக்கி

178. Enterprises .. முனைவகம், வணிக மையம்

179. Essences .. சாரங்கள், நறுமணச் சாரங்கள்

180. Ever Silver .. நிலைவெள்ளி, எவர்சில்வர்

181. Exhaust Fan .. உறிஞ்சு விசிறி, காற்றுப்போக்கி

182. Explosive .. வெடிமருந்து

183. Export .. ஏற்றுமதி

184. Fabricators .. கட்டமைப்பாளர்

185. Factory .. தொழில் மனை, தொழிலகம், தொழிற்சாலை

186. Fancy Stores .. புதுமைப்பொருளகம், பல்பொருள் அங்காடி

187. Fan Regulator .. விசிறி கலிங்கு, விசிறி ஒழுங்குபடுத்தி, விசிறி வேக இயக்கி

188. Fashion .. புதுப்பாணி

189. Fast Food .. விரைவுணா (உணவு), உடனடி உணாவு, விரைவு உணவகம்

190. Fax .. தொலை எழுதி, தொலை நகல், தொலை நகலி

191. Federation .. ஒன்றாயம், கூட்டமைப்பு

192. Feeds .. தீனி, தீவனம்

Cattle Feeds .. கால்நடைத் தீவனம்

Poultry Feeds .. கோழித் தீவனம்

193. Fibre-Glass Products .. நாரிழை - ஆடி உருவாக்க வினையகம், நாரிழை - ஆடி தயாரிப்புப் பொருள்கள்

இந்த இசைக் கட்டுரையை இசை ஆராய்ச்சியாகக் கருதாமல், இசைக்கு மொழி எவ்வளவு அவசியமோ அதேபோல் மொழிக்கும் இசை மிகவும் முக்கியம் என்ற கருத்தாக எண்ணிப் படிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் இசை எப்படி வந்தது என்று ஆராய்ந்தோமானால் இது நன்றாக விளங்கும். இசை, பாடலாக வந்தது எப்படி



# இசைத் தமிழ்

"இசைக்கு மொழி இல்லை, ஆனால் மொழிக்கு இசை தேவை. அதனால்தான் தமிழிசை இயக்கம் தோன்றியது"- என்று பல ஆண்டுகளுக்கு முன்பே ஒரு கவிதையில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்லியிருக்கின்றார். அது முற்றிலும் உண்மை.

காரணம் ஒரு வித்துவானோ, வித்து வாசினியோ எவ்வளவு நேரம் இராகம் பாடினாலும், ஒரு கட்டத்தில் அதே இராகத்திலோ, மற்ற இராகத்திலோ எப்படியும் ஏதோ ஒரு பாடலைப் பாடித்தான் ஆகவேண்டும். அந்தப் பாட்டு நமக்குப் புரியும் மொழியில் இருந்தால், அதை நாம் இசையோடு சேர்த்து மொழியையும் ரசிக்கின்றோம். அதுவே நமக்குப் புரியாத மொழியானால் பாடும் முறையைப் பார்த்து அந்தப் பாட்டை மிகவும் ரசிக்கின்றோம்.

என்று ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணத்தையும் தங்களுடைய ஆராய்ச்சியின் மூலமாகவும் சொல்லுகின்றார்கள். இதில் பல வேறுபாடுகளும் பல வேறுபாடுள்ள கருத்துக்களும் வருகின்றது. நான் என்னுடைய கருத்தை மட்டும் சொல்ல ஆசைப் படுகின்றேன். என்னுடைய கருத்தில் யாரையும் எந்த ஆராய்ச்சியாளர்களையும் குறை சொல்லவில்லை. அந்த நோக்கமும் கிடையாது; இது முற்றிலும் எனது சொந்தக் கருத்தாகும்.

3ஆம் நூற்றாண்டிலிருந்து 6ஆம் நூற்றாண்டு வரையிலும் வாழ்ந்த புலவர்களில் சிலபேரை இங்கே நாம் குறிப்பிடலாம்; அவர்கள் இசைபட வாழ்தலே உயிர் என்னும், தமிழ்நெறி திருவள்ளுவர், சிலப்பதிகார இளங்கோவடிகள், சங்கத்தமிழ்-

இசைப்பேரறிஞர் டி.ஆர்.பாப்பா

புறநானூறு, காரைக்கால் அம்மையார் இவர்களின் பாடல்கள் எல்லாம் பழமை யான மிகப் பழம்பெரும் பாடல்களாகும். இவர்களின் பாடல்களுக்கு இசை வடிவம் கொடுத்தது யார் என்று தெரியவில்லை. ஆனால் இவர்களின் பாடல்கள் அரும்பெரும் தத்துவங்களும், அறிவிற்குச் சிறந்த அருமை பெருமை உள்ளவைகளாகவும், மனிதனை வளப்படுத்தவும் உள்ள கருத்துக்கள் கொண்டவைகளாகவும் உள்ளன. இந்தப் பாடல்கள் எல்லாம் மக்களிடையே வரா மலும், பிரபலம் அடையாமலும் போனதற்குக் காரணம் இப்பாடல்களில் வரும் தமிழ்ச் சொற்கள் மிகக் கடுமையான தமிழ்ச் சொற்கள் ஆகும்.



மேலும் இப்பாடல்களுக்கு, அர்த்தம் புரிந்துகொள்ளுவது மிகவும் சிரமம். ஆகையினால், இப்படிப்பட்ட பாடல்களை, நல்ல தமிழில் பாண்டித்தியமுள்ள தமிழ் அறிஞர்களைக் கொண்டு, அதில் உள்ள கருத்துக்கள் கொஞ்சமும் சிதையாமல், இன்னும் எளிய தமிழில் ஆக்கி, பொருள் விளங்கும்படி மக்களிடையே பரவச் செய் தால் மிகவும் வரவேற்புப் பெறும்; மக்களுக் கும் நல்ல தூய்மையான குணங்களும், நல்ல பழக்கவழக்கங்களும் உண்டாகும். இதற்கு இரண்டு உதாரணங்களைச் சொல்ல ஆசைப் படுகின்றேன்.

சங்கத் தமிழில் இருந்து சில பாடல்களை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மிக எளிய தமிழில் எல்லோருக்கும் புரியும்படியாகவும், பாடலில் உள்ள அர்த்தம் சிறிதும் குறையாமலும் இனிமையாக, நல்ல தமிழில் எளிமைப்படுத்தி எழுதியுள்ளார்கள். அந்தப் பாடல்கள் இசையோடு கேசட்டாக வந்து மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றதுடன், அதுவே இசை நாட்டிய நாடகமாகவும் வந்து மிகப் பிரபலமானது.

அதில் ஒரு பாடலில் தாய் தன் மகனைப் போருக்கு அனுப்புகின்றாள். போருக்குப் போனவர்களில் சிலபேர் திரும்பி வந்து விடுகின்றார்கள், அவர்களிடம் அந்தத் தாய் தன் மகனைப் பற்றி விசாரிக்கின்றாள்; அவர்களோ மௌனம் சாதிக்கின்றார்கள், ஒருவன் மட்டும் துணிந்து அந்தத் தாயிடம் உங்கள் மகன் போரில் மடிந்துவிட்டான் என்று உரைக்கின்றான். அந்தத் தாய் அவனிடம் 'எப்படி மடிந்தான்?' என்று கேட்கின்றாள். அவன் போரில் பலபேரைக் கொன்று, வெற்றி வீரனாக, மார்பில் வேல் தாங்கி மடிந்துவிட்டான் என்று உரைக் கின்றான். அந்தத் தாயோ கண்ணீர் வடிக்கின்றாள். அந்தக் கண்ணீர் துக்கமான கண்ணீர் அல்ல. தன் மகன் வீரமரணம் அடைந்ததை நினைத்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றாள்.

அந்தக் காட்சியில் வரும் பாட்டும், இசையும் பார்ப்பவர்கள் அனைவரையும், என்னையும் சேர்த்துக் கண்கலங்க வைத்துவிட்டது. காரணம் அந்தத் தமிழிசைப் பாடலும், இசையும், அந்தத் தாயின் நடிப்பும் மிகவும் அற்புதமாக அமைந்து இருந்தது. அந்தப் பாடலும், பாடலுக்கேற்ற இசையும் ஏற்றதாக அமைந்ததுதான் இதற்குக் காரணம். பாடலும், அதற்குத் தகுந்த இசையும் அமைந்தால் தேனும், பாலும் கலந்ததுபோல் இனிக்கும்; இதுதான் தமிழிசை!

மற்றொன்று, செல்வி. டாக்டர் பத்மா சுப்பிரமணியம் நாட்டியத்தில் ஒரு அருமையான தமிழ்ப் பாடலுக்கு அபிநயம் செய்தார்; அந்தப் பாடல் "சின்னஞ்சிறு

பெண்போலே" என்ற பாடல் ஆகும். அந்தப் பாடலில் வரும் ஒரு வரி "பெண்ணவளின் கண்ணழகைப் பேசி முடியாது" என்ற வரிக்கு டாக்டர் பத்மா சுப்பிரமணியம், நாட்டியம் பார்த்த அனைவரையும் கண்கலங்கும்படி செய்து விட்டார். அதன் காரணமும், மொழியும், இசையும் ஒன்றோடொன்று கலந்து இசைக்குத் தகுந்த மொழியும், மொழிக்குத் தகுந்த இசையும் அமைந்ததால் கேட்பவர் செவிக்கு விருந்தாக அமைந்தது. இதுதான் இசைத்தமிழ்.

இசை என்பது எல்லா நாட்டுக்கும் ஒன்றுதான். ஆனால் அவரவர் மொழிக்குத் தகுந்தாற்போல் இசையை அமைத்துக் கொள்கின்றார்கள்.

நமது தமிழ் மொழியில் எத்தனையோ அருமையான பாடல்கள் உள்ளன. அவை களைத் தொகுத்து, தமிழிசைச் சங்கம் வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

பழம்பெரும் பாடல்களில் தெய்வீகப் பாடல்களும், பல பொதுப் பாடல்களும், பகுத்தறிவுப் பாடல்களும் உள்ளன. அவைகள் அனைத்தும் மனிதனுக்கு நல்ல பழக்கவழக்கங்களை உண்டாக்குவதையும், அறிவுக்கு விருந்தாகவும், நல்ல தூய்மையான எண்ணங்களும், யாருக்கும் தீங்கு நினைக்காத நினைவுகளும், இப்படிப் பல நன்மைகள் நிறைந்த தமிழிசைப் பாடல்கள் ஆயிரக் கணக்காக உள்ளன. அவைகள் எல்லாம் தமிழிசைச் சங்கத்தில் பண் ஆராய்ச்சி செய்வது போல் இவைகளையும் ஆராய்ச்சி செய்து, நல்ல இசையோடு பாமர மக்களிடம் பரவச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் வணங்கிக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழிசையை வளர்க்க ஒரு தமிழிசைச் சங்கம் வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் பல ஆண்டு களுக்கு முன்னாலேயே சொல்லியிருக் கின்றார். இதைச் செட்டிநாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களும், அவரது மைந்தர், ராஜா சர் வள்ளல் முத்தையா செட்டியார் அவர்களும் தமிழிசை வளர்வதற்கு என்றே ஒரு தமிழிசைச் சங்கத்தை ஆரம்பித்தார்கள். இந்தச் சங்கம் அண்ணாமலை மன்றத்தில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் தமிழிசைச் சங்கம்தான்! இப்படிப்பட்ட பல தமிழிசைப் பாடல்களை ஆராய்ந்து தொகுத்து, பாமர மக்களிடை யேயும் இசைத் தமிழ்ப் பாடல்கள் பாடும் இளைஞர்களிடையேயும் பரவச் செய்து எல்லோரும் இசைத் தமிழை உணர்ந்து பயனடையும்படி செய்யவேண்டும்.

தற்பொழுது இருக்கும் தமிழ் இசைச் சங்கம் நிச்சயமாக இதை நிறைவேற்றும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

வாழ்க முத்தமிழ், வளர்க இசைத்தமிழ்!



"உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே!"

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்

"இன்பம் எனப்படுதல் - தமிழ் இன்பம்
எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!"

"தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன் மாசில்லாத
உயர்தமிழை உயிர்என்று போற்றுமின்கள்!"

- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

மருத்துவக் கட்டுரை:

# வலிப்பு நோய்

டாக்டர் கே. எஸ். ஜெயராணி

**சாலையில் போகும்போதே கையும் காலும் வெட்டியிழுத்துக் கீழே விழுந்து, வாயில் நுரை தள்ளச் சிலர் அவதிப்பட நேரிடும் வலிப்புநோய்- அந்நோய்க்கான நிவாரணம் பற்றியெல்லாம் இங்கே விளக்கப்படுகிறது.**

ஆண்டுதோறும் நவம்பர் மாதத்தில் ஒரு நாள் தேசிய வலிப்பு நோய் விழிப்புணர்வு நாளாகக் கொண்டாடப்படுவது வழக்கம். எந்த ஆண்டும் போல இந்த ஆண்டும் அவ்விழா நடைபெற்றது.

அப்படியொன்றும் குணப் படுத்த முடியாத கொடிய நோயல்ல இது. எனினும், தம்பதியரில் ஒருவருக்கு வலிப்பு நோய் இருக்கு மானால், அதையே காரணமாக வைத்து, அந்தத் திருமணத்தையே செல்லாது என்று சொல்லிவிடும் அளவிற்கு இந்துத் திருமணச் சட்ட விதிமுறைகள் உள்ளன.

அச்சட்டத்தின் பிதாமகர்கள், இந்நோயை இலேசில் குணப்படுத்த முடியாத மனநோய்க்கு நிகராகவே கருதியதுதான் இதற்குக் காரணம். ஒருவேளை அச்சட்டம் உருவான காலம் அப்படியிருந்திருக்குமோ என்னமோ தெரியாது. ஆனால், மருத்துவ உலகம் பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ள இந்நாளில் மற்ற நோய்களைப் போல் கட்டுப்படுத்தக் கூடியதே வலிப்பு நோய் என்பது கண்டுணரப்பட்டுள்ளது.

எனவே, திருத்தப்பட வேண்டிய சட்டங்களின் விதிகளில் இதுவும் ஒன்றாகும் இந்திய வலிப்பு நோய்ச் சங்கம் நீண்ட காலமாகவே இக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறது.

## நோயும் காரணங்களும்

வேறு எப்படித்தான் இந் நோயைக் குணப்படுத்துவது என்று ஆராயும் முன்பாக, வலிப்பு நோயின் தன்மை- அது வருவதற் கான காரணங்கள் ஆகியவை பற்றிக் கவனிக்கலாம்.

## வலிப்பு நோய்

மனித மூளையை ஒரு கம்ப் யூட்டருடன் ஒப்பிடலாம். உடலின் சீரான இயக்கத்திற்கு மூளையி லிருந்து தெளிவான ஆணைகள் வந்துகொண்டிருக்கும். எதிர் பாராமல் திடீரென ஏற்படும் மூளையின் அதிகப்படியான மின் அதிர்வுகள் தான் (Excessive Electrical Discharge) வலிப்பு நோயை உண்டுபண்ணுகிறது.

சாதாரணமாக வலிப்பு நோயால் எத்தனைப் பேர் அவதிப்படுகிறார்கள் என்று கேட்பீர்களானால், இந் நோயால் நம்மில் ஒன்று அல்லது இரண்டு சதவிகிதம் பேர் மொத்தத் தில் பாதிக்கப்படுகிறோம்.

ஒவ்வொருவரின் வயதிற்கும் ஏற்ப, வலிப்பு நோய்க்கான கார ணங்கள் மாறுபடுகின்றன என்பதை இங்கே விளக்கலாம்:

## பிறந்த குழந்தைக்கு

பிறக்கும் போது மூச்சுத் திணறல் ஏற்படும்- பிராணவாயு (Oxygen) குறைவு.

பிரசவத்தின் போது குழந்தை யின் தலையில் ஏற்படும் காயங்கள்.

போதுமான மூளை வளர்ச்சி யின்மை

-ஆகியவற்றால் வலிப்பு நோய் வரும்.

## 2 முதல் 12 வயதுள்ள குழந்தைகளுக்கு

☆ காய்ச்சல்

☆ நோய்க் கிருமிகள்

☆ தலையில் அடிபடுவதால்

-அல்லது ஒரு காரணமும் இல்லாமலும் இந்த நோய் வரும்.

## இளைஞர்களுக்கு

☆ தலையில் அடிபடுவது

☆ மது அல்லது போதை மருந்து உபயோகப்படுத்துவது

☆ அவ்வாறு இருந்து விட்டு அதைத் திடீரென நிறுத்துவது.

☆ மூளையில் ஏற்படும் கட்டிகள்

-ஆகியவற்றால் வலிப்பு நோய் வரும்.

## வயதானவர்களுக்கு

☆ மூளையில் இரத்த ஓட்டம் குறைவது

☆ இரத்தக் கசிவு

☆ சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்குச் சர்க்கரை

உடலில் மிகவும், அதிகமாவது அல்லது மிகவும் குறைவது

-போன்ற காரணங்களால் இது வரும்.

பொதுவாக **Idiopathic** எனப் படும்- எவ்விதக் காரணமுமின்றி வரும் வலிப்பு நோயே மிகவும் பரவலாக அதிகம் காணப் படுகிறது.

**காய்ச்சலால் வரும் வலிப்பு நோய்**

ஒருவரின் தாய் தந்தையருக்குக் காய்ச்சலால் வலிப்பு வந்திருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை களுக்கும் இந்நோய் வர அதிகம் வாய்ப்புள்ளது.

குழந்தைகளுக்குக் காய்ச்சல் ஆரம்பமான உடனேயே உடல் வெப்பம் அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு உடல் வெப்பத்தைக் குறைக்கும் **Paraceta-mol** மருந்தை வீட்டிலேயே முன்னெச்சரிக்கையாக வைத்திருந்து உடனே கொடுக்க வேண்டும். அதன் மூலம் இந்நோயைத் தடுக்கலாம்.

திரும்பத் திரும்பக் காய்ச்சலால் வலிப்பு வந்து பாதிக்கப்படும் குழந்தைகளும் உண்டு; அவர் களுக்கு ஜுரம் வந்தவுடன் **Paracetamol** மருந்துடன் **Phenoborbi-tal** மாத்திரையும் வலிப்பு வரா திருக்கக் கொடுக்கலாம்.

ஆனால், சில குழந்தைகளுக்கு வலிப்பும், ஜுரமும் சேர்ந்து வருவது மூளைக் காய்ச்சலாலும் கூட ஏற்படலாம். இவ்வகை நோயாளிகள், பொறுத்துப் பார்க்கலாம் என்றில் லாமல், விரைந்து மருத்துவரின் ஆலோசனையை நாடுவது சிறந்தது.

**வலிப்பு நோயின் வகைகள்**

உடல் முழுவதும் வெட்டி வெட்டியிழுக்கக்கூடிய வகை (Toric Clonic) என்பது ஒன்று.

இந்த நோய் கண்டால், ஒரு நிமிடம் நோயாளியின் தசை நார்கள் எல்லாம் இழுத்துப் பிடிக்கும்; நோயாளி நிலை தடுமாறி வேரற்ற மரம் போல் சாய்வார். பின்பு கை, கால்கள், கழுத்து ஆகியவை வெட்டி வெட்டி இழுக்கும்.

வாயில் நுரை தள்ளும்.

நோயாளி தன்னையறியாமலே சிறுநீர் கழித்திருப்பார்.

நாக்கைப் பற்களால் கடித் திருப்பார்.

வெட்டியிழுப்பது நின்றவுடன், பாதிக்கப்பட்டவர் ஆழ்ந்த மயக்கத்தில் இருந்து விடுவார்.

**ஒரு பகுதியில் மட்டும் வரக் கூடிய வலிப்பு**

இதில் ஒருவகை **Jacksonian March** எனப்படும்; இவ்வகை வலிப்பு நோயை **Hughlings Jackson** என்பவர். விவரித்ததனால் இப்பெயர் வந்தது. பெருவிரலில் ஆரம்பித்து கால், பின்பு கட்டை விரல், கை, பின்பு ஒரு பக்கம் முகம் மட்டும் எனப் பரவக் கூடியது இந்த வகை நோய்.

**மற்றொரு வகையும் (Abscence) இதில் உண்டு.**

இதில் கைகால் இழுப்பு இருக்காது.

நோயாளி கீழே விழமாட்டார்.

இது சில நொடிப்பொழுதே ஒருவருக்கு இருக்கும். ஆகையால், இதைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம்.

சிறு வயதுள்ள குழந்தைகளுக்கு இவ்வகை வலிப்பு நோயானது சாதாரணமாக வருகிறது.

இந்நோய் வருபவர், சில நொடிப்பொழுது அப்படியே வெறித்துப் பார்ப்பார்; பின்பு மீண்டும் பழைய நிலையினை அடைந்துவிடுவார்.

ஒரே நாளில் இதேபோல் பலமுறை வரக்கூடும்.

இந்நோயில் பாதிக்கப்பட்ட சம யத்தில் நடந்த நிகழ்ச்சிகள் எதுவும் அவரின் நினைவில் இருக்காது.

அந்தக் குறிப்பிட்ட சிறுவன் அல்லது சிறுமியின் வகுப்பு ஆசிரியர்கள் இதனை எளிதில் கண்டுபிடித்துவிடுவார்கள்.

இந்நோயை மருந்தின் மூலம் எளிதில் குணப்படுத்தலாம்.

இந்நோய் வந்தவர்களில் மூன்றில் ஒரு பங்குப்பேர் முற்றி லும் குணம் அடைந்துவிடுவார்கள்.

*1/3*ல் பங்கு தொடர்ந்து இவ்வியாதி இருக்கும்.

*1/3*ல் பங்கு பிற்காலத்தில்- Tonic Clonic Type வலிப்பும் இதனால் வரலாம்.

**தொடர் வலிப்பு நோய்**

சாதாரணமாக வலிப்பு நோய் சில நிமிடங்களே ஒருவருக்கு இருக்கும்; பின்பு அந்த நோயாளி



மயக்கமடைந்துவிடுவதோடு, எவ்விதச் சலனமுமில்லாமல் இருப்பார்.

ஆனால், தொடர் வலிப்பு நோய் கண்ட நோயாளி அவ்வாறு இருக்க மாட்டார்; பாதிக்கப் பட்டவருக்கு, தொடர்ச்சியாக நினைவு திரும்பாமலேயே, வலிப்பு மீண்டும், மீண்டும் வந்து கொண்டிருக்கும்.

இது பல நேரங்களில் உயிருக்கே கூட ஆபத்தாக முடியலாம். ஆகவே, இந்நோய் கண்டவரை, அலட்சியமாக இராமல் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல் வேண்டும்.

**நோயாளியைக் கவனித்தல்**

வலிப்பு நோய்க்கு ஆளான ஒரு நோயாளியை 'நெருப்பு' போன்ற அபாயகரமான பொருட் களின் அருகிலிருந்து உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

நோயாளி சுவரில் மோதிக் காயப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கத்தி போன்ற கூர்மையான ஆயுதங்கள் அருகில் இருந்தால் அவற்றை அப்புறப் படுத்தவும் வேண்டும்.

**வலிப்பு நோய் கண்டவரைக் குப்புறவோ, மல்லாந்தோ படுக்க வைக்கக் கூடாது**

நோயாளியின் வாயில் அந்நேரத்தில் வலிந்து எதையும் திணிக்கக் கூடாது; கை, கால்கள் வெட்டியிழுப்பதைத் தடுக்கவும் முடியாது; அது சிறிது நேரத்தில் தானாகவே நின்றுவிடும்.

நோயாளி மயக்கமடைந்தவுடன், சோடாவை வாங்கிச் சிலபேர் அவர் வாயில் பலவந்தப் படுத்தி ஊற்றுவார்கள்; அப்படி ஊற்றக் கூடாது.

நோயாளியின் கைகளில் வெட்டியிழுக்கும் போது சிலர் இரும்பைக் கொடுக்கிறார்கள். இதனால் எந்தப் பலனும் இல்லை; இதனால் எவ்வித நன்மையும் இல்லை!

ஆனால், தீமை உண்டு. அப்படிக் கொடுக்கப்படும் இரும்பினால் நோயாளி தன்னைக் காயம்படுத்திக் கொள்ளக்கூடும். ஆகவே, இரும்புத் துண்டு தருவது நோயாளிக்கு நன்மை செய்வது ஆகாது.

வலிப்பு நோய் உள்ளவர்கள் திருமணம் செய்து கொள்ளலாமா என்றெல்லாம் சிலரால் சந்தேகத்தோடு கேட்கப்படுகிறது.

நிச்சயமாகச் செய்து கொள்ளலாம்; குழந்தைகளும் பெற்றுக் கொள்ளலாம். தாம்பத்ய வாழ்வுக்கு இந்த நோய் ஒரு தடையே இல்லை.

அவ்வாறு மணம் செய்து கொண்டோருக்குப் பிறக்கும் குழந்தைக்கு, இவ்வியாதி வருவதற்கான வாய்ப்புகள் 10 சதவிகிதத்திற்குக் குறைவேயாகும்.

**எவ்வாறு குணப்படுத்துவது?**

**'நோய்நாடி நோய் முதல்நாடி**
**அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.'**

-என்ற வள்ளுவன் கூற்றுப் போல...

வலிப்பு நோய்க்கான காரணத்தை முதலில் ஆராய்ந்து தெரிந்து கொண்டு அதை அகற்ற வேண்டும்.

உதாரணமாக- சர்க்கரை நோயுள்ளவர்களுக்கு, சர்க்கரை திடீரென உடலில் குறைவதனால் வலிப்பு நோய் வரலாம். ஆகவே, அப்படிப்பட்டவர்கள் உடலில் சர்க்கரையைச் சரியான அளவில் வைத்திருப்பதன் மூலம் இதைத் தடுக்கலாம்.

மூளையில் உண்டான கட்டியினால் வலிப்பு நோய் வருவதுண்டு; அப்படி வந்தால் இந்தக் கட்டியை அறுவைச் சிகிச்சை மூலம் எடுக்கவேண்டும்; வலிப்பு நோய் வராது.

**மருந்தின் மூலம் கட்டுப்படுத்துவது**

மருந்தின் மூலம் வலிப்பு நோயை மிகச் சுலபமாகக் கட்டுப் படுத்திவிட முடியும். அதற்கு, சக்தி வாய்ந்த மருந்துகள் பல உள்ளன. அவற்றின் மூலம் எளிதில் கட்டுப்படுத்திவிடலாம்.

Phenytion: Dilantin Sodium 300-400 எம்.ஜி.முதல், Trimethadion வரை, வலிப்பு நோய்க்கு என்றே நோய் கண்டவுடன் தரவும், வந்தபின் தொடர்ந்து சிலகாலம் சாப்பிடவும் என்று பல மருந்துகள் வந்திருக்கின்றன.

ஆகவே, வலிப்பு நோய்க்கு ஆளானவர், தாமே அவற்றை வாங்கிச் சாப்பிடாமல் தகுந்த மருத்துவரிடம் காட்டி, வந்துள்ள நோய்க்கு ஏற்ற மருந்தை வாங்கிச் சாப்பிட்டு எளிதில் நலம் பெறலாம்.

அவ்வாறில்லாமல், தொடர்ந்து ஏதாவது தாமாக தவறான மருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் சிலருக்கு வலிப்பு நோய் வரும்.

ஆகையால், வலிப்பு நோயின் தன்மையை அறிந்து, சரியான மருந்து சரியான அளவில் கொடுக்கப்பட்டால் யாருக்கும் இவ்வாறு நேராது.

அல்லது, அவர் தொடர்ச்சி யாக மருந்து உட்கொள்ளத் தவறியிருந்தாலும், குணம் பெறுவது தாமதமாகக் கூடும்.

# திருவள்ளுவன்

புத்தகம் நூறு புரட்டிக் களைப்புற்றுச் சித்தம்
கங்கித் திகைப்பதேன்? - வித்தகன்தெய்வப்
புலவன் திருவள் ளுவன்சொன்ன
பொய்யில் மொழியிருக்கும் போது!

**- கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை**

### நோயாளிகள் தவிர்க்க வேண்டியவை

வலிப்பு நோய்க்கு ஆளான வர்கள், கீழ்க்கண்டவைகளைக் கட்டாயம் தவிர்ப்பது நல்லது.

- ☆ உயரத்தில் ஏறுவது.
- ☆ கடலிலோ, ஆற்றிலோ, குளத்திலோ தனியாக நீந்துவது.
- ☆ தீயின் அருகில் வேலை செய்வது.
- ☆ வண்டி வாகனம் ஓட்டுவது.

வலிப்பு நோய்க்கு ஆளான வர்கள் வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிட வேண்டுமா எனச் சிலர் கேட்கலாம்; அப்படி யொன்றுமில்லை. நோய்க்கு ஏற்ற படி அதன் காலம் கூடவும், குறையவும் நேரிடும்.

வலிப்பு நோயைத் தூண்டக் கூடிய காரணங்கள் பல இருக் கின்றன; அவற்றில் முக்கிய மானவை சில, பின்வருமாறு:

- ☆ தூக்கமின்மை
- ☆ பரிந்துரைக்கப்பட்ட மருந்து உட்கொள்ளாமல் தவறி விடுவது
- ☆ அடிக்கடி மது, அல்லது போதை மருந்து உட்கொள்ளுவது
- ☆ சரியான உணவு இன்றிப் பட்டினி கிடப்பது.

### பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு:

வலிப்பு நோய் கண்ட சிறுவர் சிறுமியர், பள்ளி செல்லும் பாலகர் களாக இருந்தால் அவர்களைப் பொறுத்து நாம் சில முறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

- ☆ அவ்வாறான குழந்தைகளை மற்றவர்களுடன் தாராள மாகப் பழக அனுமதிக்க வேண்டும். அவர்கள் கூச்சப்பட்டாலும், சேர்ந்து பழகுவ தற்குத் தூண்டவேண்டும்.

## தேன்மொழி

வைய கத்தில் இணையி லாத
வாழ்வு கண்ட தமிழ்மொழி
வான கத்தை நானி லத்தில்
வரவ ழைக்கும் தமிழ்மொழி

* * *

தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை வழியாகும்
அன்பே அவனுடை மொழியாகும்!

* * *

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியே!

* * *

தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத்
துறக்காதே
"அமிழ்தம் தமிழ்மொழி" ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்!

**—நாமக்கல் கவிஞர்**
**வெ. இராமலிங்கம்பிள்ளை**

- ☆ எவ்விதமான மிகுந்த கட்டுப் பாடுகள் சொல்லியும் அக் குழந்தையைத் தனிமைப் படுத்தி விடக்கூடாது.
- ☆ மற்ற குழந்தைகள் போலவே வலிப்பு நோயுள்ள குழந்தை யும் மிகவும் நன்றாகப் படிக்க முடியும்.
- ☆ அவர்களிடம் தாழ்வு மனப் பான்மை ஏற்படா வண்ணம் காக்கவேண்டும்; அக் குழந்தை களாலும் திறமையும் தேர்ச்சி யும் பெறமுடியும்.
- ☆ வகுப்பில் உள்ள ஆசிரி யரிடம், குழந்தையின் நோய் குறித்து முன்கூட்டியே தெரியப்படுத்தி, இந்நோய் வந்தால் எவ்வாறு முதலுதவி சிகிச்சை போல் குழந்தைக்கு உதவ வேண்டும் எனக் கூற வேண்டும்.
- ☆ சிலர் கூறுவதுபோல், இந் நோய் 'முன்னால் செய்த தவறுகளின் பலன்தான்' என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தி விடாமல் இதுவும் மற்றவைகள் போல் ஒரு நோய்; அவ்வளவு தான்- இதை எளிமையாகக் குணப்படுத்த முடியும்; மற்றவர் களைப் போல் நல்லபடி வாழ முடியும் என்ற எண்ணத்தை அவர்களிடம் நாம் ஏற்படுத்த வேண்டும்.

# எங்கள் ஊர் பிரச்சினை

**பிரச்சினை:**

மேல்மலையனூர் கிராமத்தில் உள்ள ஜனத்தொகைக்கேற்ப போதுமான குடிநீர், சப்ளை செய்ய இயலாத மேல்நிலைக் குடிநீர் தேக்கத் தொட்டியால், கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும் சேர்த்து எப்படி குடிநீர் வழங்க இயலும்? அதோடு மேல்நிலைத் தொட்டியையும் சரிவரப் பாதுகாப்பதில்லை. அதன் விளைவாகப் பொதுமக்களுக்கு, குறிப்பாகக் குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கும், காய்ச்சலும், மஞ்சள் காமாலை நோயும் நிறைய ஏற்படுகிறது. எனவே மேற்படி தொட்டியைச் சுத்தம் செய்து, தக்க பாதுகாப்பு பவுடர்களால், அதாவது பிளீச்சிங் பவுடரினால் கழுவி சுத்தம் செய்தால் மிக நன்றாக இருக்கும்.

இது குறித்து, மேல்மலையனூர் வட்டார வளர்ச்சி அலுவலரைப் பலமுறை அணுகி நேரிடையாய் அழைத்துக் காட்டியும், அவர்களும் ஏதும் முயற்சித்ததாய் தெரியவில்லை. எனவே மேற்குறிப்பிட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாய் நிவர்த்தி செய்து தருமாறு கோருகிறோம்.

அமாவாசை தினங்களில் குறைந்தது ஒரு இலட்சம் மக்கள்- மொத்தம் மூன்று நாட்கள் இங்கு வந்து தங்குகின்றார்கள். ஆனால், அவர்கள் தங்குவதற்கேதுவாய் எந்தவொரு வசதியும் அரசோ அல்லது கோயில் நிர்வாகமோ அல்லது சுகாதாரத் துறையோ ஏதும் செய்திட முன்வரவில்லை. அடிப்படை முக்கிய வசதியாகப் பொது மக்கள் கழிப்பிடம் கூட செய்து தரப்படவில்லை என்பதுதான் பெருங்கொடுமை. இதனால் கோயிலைச் சுற்றியுள்ள பொங்கல் வைக்கும் இடங்களிலும், பொது மக்கள் கால் வைத்து நடமாடும் மற்ற பிற இடங்களிலும், ஊரின் அனைத்துத் தெருக்களிலும் இந்த அறிவற்ற அசிங்கச் செயலால் ஊரே நான்கைந்து நாட்களுக்குப் பெரும் நாற்றமெடுத்துவிடுகிறது. இதனால் பொதுமக்களுக்குப் பலவித நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

கோவிலுக்கு வந்து குவியும் பொது மக்களால் பெருந்தொகை வருமானம் கோயிலுக்குக் கிடைக்கிறது. அப்படி வரும் வருமானத்தில் சில விழுக்காடு இப்பணிக்குச் செலவிட்டாலே போதுமானது. அதாவது துப்புரவுத் தொழிலாளர்களை மேலும் அதிகப்படுத்துவது. கோயில் தவிர ஊரின் அனைத்துத் தெருக்களையும் சீர் செய்ய வேண்டுகிறோம். இக்கோயில் அரசு பதிவு பெற்றிருந்தாலும், தனியார் பராமரிப்பில் இருப்பதினால் இப்படி சில சீர்கேடுகளால் அழிவுறுகிறது. காலம், காலமாகக் கட்டிப் பாதுகாத்து வந்த பழந்தமிழர் பண்பாடும் சிதைந்து போனது. கோயிலுக்கு E.O. அவர்களிலிருந்து, அவர்களுக்கு மேலதிகாரிகள் A.C. மற்றும் D.C. போன்ற கோயில் பராமரிப்பு உயர் அதிகாரிகளும் இக்கோயிலுக்கு அடிக்கடி வருகை தந்தும் வழியேதும் வாய்க்கவில்லை.

மேற்படி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனியும் தொல்லை தராவண்ணம் ஏற்ற அலுவலர்களைக் கண்டித்து உடனடியாகப் பொதுக் கழிப்பிடம், மற்ற பிற வசதிகளையும் போதிய அளவிற்கு அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

-மேல்மலையனூர் இளைஞர் மன்றங்கள்
விழுப்புரம் மாவட்டம்.

**தீர்வு:**

மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோயில் ஒரு முக்கியப் பிரார்த்தனை ஸ்தலம் மற்றும் வளர்ந்து வரும் திருக்கோயில் ஆகும். தற்போது இக்கோவிலுக்கு ஒவ்வொரு அமாவாசையின்போதும் பல்வேறு ஊர்களிலிருந்து பக்தர்கள் வருகை தருகின்றனர். விசேஷ தினங்களில் போதுமான அளவு பினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் தெளித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சுற்றுப்புறத்தைத் தினசரி சுத்தம் செய்யப் பணியாளர்கள் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பெண்கள் குளிப்பதற்காகக் தனியாகக் குளியலறை கட்டப்பட்டு, பணி முடியும் தருவாயில் உள்ளது. கழிவு அறை வசதிகள் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுகாதாரம் தொடர்பாக உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-கே.ஆர். மாரிமுத்து
ஆணையாளர்
ஊராட்சி ஒன்றியம், மேல்மலையனூர்.

**பிரச்சினை:**

**மன்னர் திருமலை மாவட்டத்தில் பழனி தாலுக்காவில், கீரனூர் கிராமம் அமைந்துள்ளது. இங்கு சுமார் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அமைந்துள்ளன. இங்கு கழிப்பிடம் வேண்டி எம்.பி. மற்றும் எம்.எல்.ஏ. ஆகியோரிடம் மனுச் செய்தும் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. கழிப்பிட வசதி இல்லாமல் ஆண், பெண் இருபாலரும் மிகமிக அவதிப்படுகின்றனர். அடிப்படை வசதி செய்து தருவோம் என்று கூறிய தமிழக அரசு எங்கள் ஊர் கழிப்பிட வசதி வேண்டி நடவடிக்கை எடுக்குமா?**

-எம். நாகராஜன்
கீரனூர்.

**தீர்வு:**

கீரனூர் பேரூராட்சியில் கீழ்க்கண்ட 3 இடங்களில் பெண்களுக்கான கழிப்பிடம் கட்ட திண்டுக்கல் பேரூராட்சியின் உதவி இயக்குநர் அவர்களின் ந.க.எண்.5148/96 டி.பி.1, நாள் 25.10.96 கடிதத்தில் கேட்கப்பட்டு இதற்கான மேற்படி தேதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. கிழக்குத் தெரு சர்வே எண்.1131/16 கீரனூர்

2. ஆதிதிராவிடர் நடுத் தெரு 1121/9 கீரனூர்

3. இராஜ வாய்க்கால்அருகில் 131/231 ஏ2 கீரனூர்

இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு பெற்றபின் இவ்வேலைகள் மூன்றும் செய்து முடிக்கப்படும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

-சி. சாரங்கபாணி
நிர்வாக அலுவலர்,
கீரனூர் பேரூராட்சி
மன்னர் திருமலை மாவட்டம்.

**பிரச்சினை:**

**எங்கள் ஊர் ஒட்டப்பிடாரம் தாலுகா, கொத்தாளி. ஒரு சிறிய கிராமம். இது கயத்தாறுக்கு அருகில் 6 மைல் தொலைவில் அதாவது 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்கு சரியான ரோடு வசதி கிடையாது. இங்கு பஸ் போக்குவரத்து இல்லாமையால் மக்கள் மிகவும் அவதியுறுகின்றனர். அதனால் தயவு செய்து கயத்தாறிலிருந்து எங்கள் ஊருக்குச் சாலைப் போக்குவரத்து வசதி செய்து தருமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.**

-எம். ராமலக்ஷ்மி
கொத்தாளி

**தீர்வு:**

கொத்தாளி கிராமத்திற்கு 4 சுற்றுக்கள் தடம் எண்.158ஏ திருநெல்வேலி – கோவில் பட்டி மூலம் இயக்கப்பட்டு வருகிறது. கொத்தாளி - கயத்தாறு சாலை பேருந்து இயக்கத் தக்க அளவு செப்பனிடப் பட்டு தகவல் தந்த பின்பு பேருந்து இயக்குவது குறித்துப் பரிசீலிக்கப்படும் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

-கோட்ட மேலாளர்
கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்
தூத்துக்குடி.

## பிரச்சினை:

**மேல்நாரியப்பனூர் கிராமம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டத்தில் இருக்கும் ஒரு அழகிய கிராமம். இக் கிராமத்தில் சுமார் 5,000 மக்கள் வசிக் கின்றனர். இதில் 80 சதவிகிதத்திற்கும் அதிகமானவர்கள் படித்தவர்கள் ஆவர். இவ்வளவு பெரிய கிராமத்திற்கு ஒரு பொது நூலகம் இல்லாதது கண்களை இழந்த மிகப் பெரிய பலசாலியின் நிலை என்னவோ? அது போன்றுதான் எங்கள் நிலையும். படித்து வேலையில்லாத இளைஞர்கள் தங்கள் நேரங்களைப் பயனுள்ள வழியில் பயன்படுத்திக் கொள்ளப் பொது நூலகம் மிகவும் இன்றியமையாததாகும். எனவே, எங்கள் கிராமத்திற்குக் கிளை நூலகம் ஒன்று அமைத்துக் கொடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.**

**-இரா. அருள்பாரதி**
**மேல்நாரியப்பனூர்.**

## தீர்வு:

5000க்கும் மேற்பட்ட மக்கட்தொகை கொண்ட கிராமங்களில் ஊர்ப்புற நூலகம் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. ஆனால் இவ்வரசாணையில் மேற்குறிப்பிட்ட மேல்நாரியப்பனூர் கிராமம் இடம் பெற வில்லை.

எனினும் அவ்வூர்ப் பொதுமக்கள் கீழ்க் காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து தரும் பட்சத்தில், பகுதிநேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும்.

1. நூலகம் உடனடியாகத் திறக்க வாடகை யற்ற இலவசக் கட்டடம்.

2. பிற்காலத்தில் இந்நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டக் குறைந்தபட்சம் 5 சென்ட் காலிமனை.

3. குறைந்தபட்சம் 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. குறைந்தபட்சம் ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் தரப்பட வேண்டும்.

5. குறைந்தபட்சம் ரூ.1000 செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேற்கூறிய நிபந்தனைகளை மேல் நாரியப்பனூர் ஊர்ப் பொதுமக்கள் நிறை வேற்றித் தரும் பட்சத்தில், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால், பகுதி நேர நூலகம் திறக்க ஆவன செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**-இரா. கண்ணன்,**
**பொது நூலக இயக்குநர்**
**சென்னை - 2**

## பிரச்சினை:

**எங்கள் கிராமம் சாத்தம்பாக்கம், வடார்க்காடு அம்பேத்கர் மாவட்டம் வாலாஜா வட்டத்தைச் சார்ந்தது. இங்கு சுமார் 3000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இங்கு போதிய போக்கு வரத்து வசதி இல்லை. இதனால் பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், தொழிலாளர்கள், நோயால் அவதிப்படுபவர், முதியோர் போன்றோர் பெருந்தொல்லைக்கு ஆளாகின்றனர். எனவே, குடிமல்லூர் ஊரில் செல்லாமல் '7ஏஎ' நேராக வாலாஜா சாத்தம்பாக்கம் செல்ல ஆணைபிறப்பிக்குமாறு தாழ்மை யுடன் கேட்டுக் கொள்கிறோம். குடிமல்லூர் ஊருக்கும் தனியாகப் பேருந்து வசதி செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள் கிறோம்.**

**-கிராமப் பொதுமக்கள்**
**சாத்தம்பாக்கம்.**

## தீர்வு:

சாத்தம்பாக்கம் கிராமத்திற்குத் தற்பொழுது நகரத் தடம் எண்.'7ஏஎ/ஏ'

ஆர்க்காடு - வேலூர் - 10 நடைகள்

ஆர்க்காடு - சாத்தம்பாக்கம் - 6 நடைகள்

ஆர்க்காடு - திமிரி - 4 நடைகள்

என மும்முனைத் திட்டத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. மேலும், சாத்தம்பாக்கம் கிராமத்திற்கு இது தவிர தனியார் பேருந்து ஒன்றும் இயக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இத்தடத்தில் குடிமல்லூர் கிராமம் பிரதான சாலையிலிருந்து 2 கி.மீ. தூரத்தில்

உள்ளே உள்ளது. எனவே, அவ்வழியாக இயக்கப்படும் '7 ஏஏ' இத்தடத்தினை உள்ளே சென்று வரும்படி (ரீ ரேஸ்) இயக்கப்பட்டு வருகிறது.

எனவே, நகரத் தடம் '7ஏஏ/ஏ' யில் கொடுக்கப்பட்டுள்ள குடிமல்லூர் கிராமத் தின்ன ரத்து செய்தால் குடிமல்லூர் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**-மேலாண் இயக்குநர்**
**பட்டுக்கோட்டை அழகிரி**
**போக்குவரத்துக் கழகம், வேலூர்.**



# கேரளம் தமிழ்நாடு வனவளம்

**கே**ரள மாநில வனத்துறை, போக்குவ ரத்து மற்றும் கோவில்கள் அமைப்பின் மாண்புமிகு அமைச்சர் திரு. பி.ஆர்.குருப், கேரள முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. பி.எம். சுரேந்திரன், இ.வ.ப. மற்றும் அதிகாரிகள் மாண்புமிகு தமிழக வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பொங்கலூர் என். பழனிச்சாமி அவர்களையும், முதன்மை வனத்துறைத் தலைவர் திரு. வி.ஆர். சித்ரபு, இ.வ.ப., அவர்களையும் சென்னையில் 5.12.96 அன்று சந்தித்தனர். தொடர்ந்து இரு மாநில அமைச்சர்கள் மற்றும் இரு மாநில வன அலுவலர்களும் கொண்ட கூட்டம் நடை பெற்றது.

எல்லைப் பகுதிகளை ஒட்டிய வனப் பகுதியில் காணப்படும் வனப் பராமரிப்பு மற்றும் வனத்துறையில் வனங்களைப் பாதுகாக்கின்ற நேரத்தில் ஏற்படக் கூடிய பல்வேறு பிரச்சினைகள் போன்றவை இக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் தமிழகக் கேரள எல்லையை ஒட்டியுள்ள பகுதியில் அதிக அளவு சந்தன மரக் கடத்தல் குறித்து சுட்டிக்காட்டப்பட்டது. இந்த சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்கு இரு மாநிலங்களின் ஒருங்கிணைந்த முயற்சி தேவை. மேலும் ஒரே மாதிரியான ஒருங் கிணைந்த வனச்சட்டம் தேவைப்படுகிறது என்பது தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் இரு மாநில அமைச்சர்களும் ஒருங்கிணைந்து முயற்சி எடுத்து வனச் செல்வ அழிவை- குறிப்பாக வன உயிரின வேட்டை, வனப்பொருட்கள் கொள்ளை அடித்தல் போன்றவற்றைத் தடுப்பதற்கு ஏதுவாகவும், அதே சமயத்தில் வனத்தின் செழுமையைப் பாதுகாக்கவும் இயலும் என்பதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப் பட்டது.

# பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

**கல்லூரி, பல்கலைக் கழகங்களில், பணிபுரிய விரிவுரையாளர்கள் தேவை.**

தமிழ்நாட்டில் கல்லூரி மற்றும் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாகப் (Lecturers) பணிபுரிய விரும்புவோர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்வு (State Level Educational Testing (SLET)) நடத்த பல்கலைக்கழக மானியக் குழுவும், தமிழ்நாடு அரசும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தை நியமித்துள்ளன.

இந்தத் தேர்வுகள் 9.3.1997 அன்று, சென்னை, சிதம்பரம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய தேர்வு மையங்களில் நடைபெறும்.

## விண்ணப்பதாரருக்குரிய கல்வித் தகுதிகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து முதுநிலை பட்டத் தேர்வு அல்லது அதற்கு சமமான தேர்வில் 55 சதவீதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

ஏப்ரல் 97 அன்று தேர்வு எழுதவுள்ள முதுநிலைப் பட்டப்படிப்பு படிக்கும் மாணவர்களும் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், அவர்கள் எழுதப் போகும் தேர்வில் குறைந்தபட்சம் 55 சதவீத மதிப்பெண்கள் பெறுதல் வேண்டும்.

1994 டிசம்பர் 31 ஆம் நாளுக்கு முன்னர் எம்ஃபில் பட்டத்துக்கான ஆய்வேடுகள் சமர்ப்பித்தவர்கள் இந்தத் தேர்வு எழுத வேண்டியதில்லை. மற்றவர்கள் எம்ஃபில்/பி.எச்.டி. பட்டம் பெற்றிருந்தாலும், அவர்களும் இந்தத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர்.

## பாடப் பகுதிகள்

### கலைபுலம் (Faculty of Arts/Humanities)

அரபி, கூட்டுறவு, (Co-operation) பொருளியல், கல்வி, ஆங்கிலம், நிறுவனச் செயலியல் (Corporate Secretaryship) பிரெஞ்சு, இந்தி, வரலாறு, இதழியல், வேளாண்மை, இசை, தத்துவம், அரசியல், அரசியல் விஞ்ஞானம் (Political Science) உளவியல், பொது நிர்வாகம், சமஸ்கிருதம், சமூகப்பணி (Social Work) சமூகவியல், தமிழ்.

### வணிகவியல் புலம் (Faculty of Commerce)

வணிகவியல்.

### சட்ட புலம் (Faculty of Law)

சட்டம்

### அறிவியல் புலம் (Faculty of Science)

தாவரவியல், வேதியியல், கணனி அறிவியல் (Computer Science) மின்னணுவியல் (Electronics) பூகோளவியல், மண்ணியல் (Geology), நூலக விஞ்ஞானம், கணிதம், நுண்ணுயிரியல் (Microbiology), உயிர்வேதியியல் (Biochemistry), உடற்கல்வி, இயற்பியல், மறுவாழ்வியல் (Rehabilitation) விலங்கியல், புள்ளியல் (Statistics).

விண்ணப்பப் படிவம், விதிமுறைகள், பாடப்பகுதிகள் (Syllabus) மாதிரி வினாக்கள் போன்றவைகளை ரூ.100 (நூறுக்கான) கோடிட்ட கேட்போலை (Demand Draft)யினை Dr. S. Nagarajan, Member Secretary, State Level Educational Testing, Bharathidasan University, Tiruchirappali - 620 024.

என்ற முகவரிக்குத் தாங்கள் எந்தப் பாடத்தில் தேர்வு எழுத விருப்பமோ அதனைத் தெரிவித்து அனுப்பிப் பெறலாம். கேட்போலையினைப் **பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி** என்ற முகவரிக்கு எடுக்க வேண்டும். கேட்போலையில், பெயர், முகவரி மற்றும் எதற்காக விண்ணப்பிக்கிறார் என்ற விவரம் மட்டுமே தெரிவிக்கப்படவேண்டும். வேறு எந்த வகையான முறையிலும் பணம் பெற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 20.1.1997 அன்றோ அல்லது அத்தேதிக்கு முன்னதாகவோ மேற்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

திருச்சிராப்பள்ளி

**டாக்டர் சி.தங்கமுத்து**
பதிவாளர்

**குறிப்பு**

மேலும் கூடுதலான விவரங்கள் அறிய விரும்புவோர் எம்ப்ளாய்மென்ட் நியூஸ் (டிச.28 - ஜன.3 1997) இதழைப் பார்க்கவும்.

## அரசு உதவிகள் பெற...

# யாரை அணுக வேண்டும்?

## -வேளாண்மைப் பொறியியல் துறை-

| வ.எண். திட்டத்தின் பெயர் | விவரங்கள் தகுதிகள் நிபந்தனைகள் | அணுக வேண்டிய அலுவலர் |
|---|---|---|
| 1. உழுவை வாடகைத் திட்டம் | இப்பணிக்குப் புல்டோசர்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது. | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற்பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) (இயந்திரம்) (ஆய்வு) (உழுவை வாடகை திட்டம்) (விரைவு திட்டம்) அலுவலகங்கள். |
| அ. நிலம் சமன் செய்தல். | வாடகை விவரம்<br>ஒரு மணிக்கு ரூ.500<br>குறைந்தபட்சம் 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்த வேண்டும்.<br>இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவீத மானியம் வழங்கப்படும். | |
| ஆ. நிலம் உழுதல் | இப்பணிக்கு டிராக்டர்கள் வாடகைக்கு வழங்கப்படுகிறது.<br>வாடகை விவரம்:<br>ஒரு மணிக்கு ரூ.110-(நூற்றுப்பத்து ரூபாய்) குறைந்தபட்சம் 4 மணி நேரத்திற்கு வாடகை செலுத்துதல் வேண்டும்.<br>இந்து ஆதிதிராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவீத மானியம் வழங்கப்படும். | |
| 2. சிறுபாசனத் திட்டம் | | |
| அ. குழாய்க் கிணறு, வடிமுனைக் குழாய்க் கிணறு அமைத்தல்.<br>ஆ. கிணறுகள் அபிவிருத்தித் திட்டம் | இத்திட்டங்களில் குழாய்க் கிணறு, வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைக்கவும், கிணறுகளை ஆழப் படுத்தவும், கிணறுகளில் பக்க வாட்டில் துளையிடவும் ரோட்டரி பெர்குசன், இன்வெல் ஹாமர் துளைக் கருவிகளும், பாறைவெடிக் கருவிகளும், நீள்துளைக் கருவிகளும், காற்றழுத்தக் கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகைக்கு | அனைத்து மாவட்டங்களிலும் உள்ள உதவி செயற் பொறியாளர் வேளாண்மைப் பொறியியல், இயந்திரம் ஆய்வு குழாய்க் கிணறு, திட்டம், விரைவு திட்டம், அலுவலகங்கள். |

| | | |
|---|---|---|
| | வழங்கப்படுகிறது. இந்து ஆதி திராவிட விவசாயிகளுக்கு வாடகையில் 50 சதவிகித மானிய மும், மேற்காணும் பணிகளை முடிப்பதற்கு ஆகும் செலவினங் களில் 50 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. | |
| 3. மண்வளப் பாதுகாப்புத் திட்டம் | உயிர்சத்துமிக்க மேல்மண், அடித்துச் செல்லாமல் காக்க சமஉயர வரப்பிடுதல் தடுப்பணைகள் கட்டுதல், ஆழ உழுதல் புல்வரப்பு அமைத்தல், காடு வளர்த்தல் பணி களை மேற்கொள்வது. இத்திட்டத் தில் சாதாரண விவசாயிகளுக்கு 25 சதவீத மானியம் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 50 சதவீத மானியம் வழங்கப்ப்டும். | அனைத்து மாவட் டங்களிலும் உள்ள உதவி செயற் பொறி யாளர் (வே.பொ) மண் வள பாதுகாப்புத் திட்டம் அலுவலகங்கள். |
| 4. நுண்ணிய நீர்ப்பாசன முறைகள் | இத்திட்டத்தில் அனைத்து விவசாயி களுக்கும் சொட்டுநீர்ப் பாசனம் அமைத்துத் தரப்படுகிறது. அனைத்து விவசாயிகளுக்கும் ஒரு எக்டேருக்கு அதிகபட்சமாக ரூ.25,000 (இருபத் தையாயிரம் ரூபாய்) மானியம் வழங்கப்படுகிறது.<br><br>பெருவிவசாயிகளுக்கு 70 சதவிகித மானியமும் சிறு/குறு/தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு 90 சதவிகித மானியமும் வழங்கப்படுகிறது. | அனைத்து மாவட்டங் களிலும் உள்ள உதவி செயற் பொறியாளர் (வேளாண்மைப் பொறி யியல்) அலுவலகங்கள். |
| 5. மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் | இத்திட்டத்தில் மலைவாழ் மக்களுக்கு 100 சதவீதமானியத்தில் கிணறுகள் ஆழப்படுத்தப்படுகின் றன. தடுப்பணைகள் அமைக்கப் படுகின்றன. நிலம் சமன்படுத்திப் பாத்திகள் அமைக்கப்படுகிறது. பெரிய தடுப்பணைகளிலிருந்து குழாய் பதித்துப் பாசன வசதி செய்து தரப்படுகிறது. | உதவி செயற்பொறி யாளர் வேளாண்மைப் பொறியியல் மண்வளப் பாதுகாப்புத் திட்டம், வேலூர், திருவண்ணா மலை, விழுப்புரம், சேலம், தர்மபுரி மற்றும் திருச்சி. |

ஆசிரியரும் வெளியிடுபவரும்: என்.எஸ். பழனியப்பன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
துணை இயக்குநர்: ஆர். அண்ணாதுரை, உதவி இயக்குநர்: எம்.அண்ணாமலை
ஆசிரியர் குழு: கே.டி. புகழேந்தி, ஜி. லோகநாதன், எம்.வி.எம். அசோகன், அமுதிமாறன், பி.எல். ராஜேந்திரன், ஜி.பாஸ்கரன், எஸ். ஜெயலலிதா
ஓவியர்கள்: என். குமாரசாமி, சி. ஜெயச்சந்திரன், பி. குமார், தி. சம்பத், தி. மகேஸ்வரி
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை - 600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# ஆசிரியர் மடல்

புதிய ஆட்சி மலர்ந்தபின்னர் பூத்திருக்கும் முதலாவது பொங்கல் நாள் இந்நாள்; 'பொங்கலோ பொங்கல்' என்று தமிழகத்தார் மனநிறைவோடு மகிழ்ந்து கொண்டாட வேண்டிய நாள். ஆனால், இந்தத் தமிழர் திருநாள், அண்மையில் ஏற்பட்ட வரம்பு கடந்த மழை வெள்ளத்தால் நம்மில் பலரைக் கண்கலங்கவும் - கைபிசைந்து திகைத்து நிற்கவும் அல்லவா செய்துவிட்டது!

அந்தக் கொடூரத்தால் பெரும் சேதத்திற்குள்ளான பகுதிகளைச் செம்மைப்படுத்தவும், பேரிழப்புக்கு ஆளானோருக்கு நேரிட்ட துயர் துடைக்கவும் என அரசு அரும்பாடுபட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் - வெள்ள நிவாரணத்திற்காக முதல் கட்டமாக 20 கோடி ரூபாயும், இரண்டாம் கட்டமாக 50 கோடி ரூபாயும், மூன்றாம் கட்டமாக 125 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு அறிவித்த நிவாரணத் தொகை எதிர்பார்க்கப்படுகிறது; எனினும், மாநில அரசால் இழப்பீடுகள் தரப்பட்டு வருகின்றன.

அடடா! இந்த நிலையில் அல்லவா வந்திருக்கிறது உழவர் திருநாளாம் பொங்கல் திருநாள்!

குடியரசுத் திருநாளில், சென்னையில் மேதகு ஆளுநர் அவர்களும், மாவட்டத் தலைநகர்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் தேசியக்கொடி ஏற்றுவது, என முன்பு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் பெறப்பட்ட உரிமை, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு சிறப்புறச் செயல்படுத்தப்பட உள்ளது.

இந்திய விடுதலைநாள் பொன்விழாக் குழு மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

துன்பம் நேர்கையில் இன்பம் சேர்க்கும் இத்தகைய செய்திகளை எண்ணியாவது, பொங்கல் திருநாளை நாமெல்லாம் பூரிப்போடு கொண்டாடுவோம்!

-ஆசிரியர்



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.7556.95

தமிழரசு
பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP

